# தமிழரசு தலைவர் தேர்தலை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு இராசமாணிக்கம் கோரிக்கை

Registered as a News paper in Ceylon

விலை சதம் 15 ★ ★

மணம், குணம், சுவை
நிறைந்தது
அண்ணா கோப்பி



எமது கோப்பி
லேபலைப் போல்
போலி லேபல்
தயாரித்து
போலி கோப்பிகளை
விற்பனைசெய்கின்றனர்
போலிகளை
வாங்கி ஏமாறாதீர்கள்.
அண்ணா இன்டஸ்றி
இணுவில்.

ஈழநாடு

EELANADU

மலர் 11

தபாற்பெட்டி எண்: 49 | இதழ்: 13

போன்: 389 | National Tamil Daily | தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 12 ஜுஹறஜ்: 5 ஞாயிற்றுக்கிழமை [23-2-69

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




கொழும்பு, சனி

தமிழரசுக் கட்சி தலைவர் தேர்தலை யாழ்ப்பாணத்தில் நடத்தும்படி தலைவர் தேர்தலுக்கு நிற்கும் இருவரில் ஒருவரான பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம், தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கத்தை கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மார்ச் 11-ம் திகதி மட்டக்களப்பில் நடத்துவதெனத் தீர்மானிக்கப் பட்டிருக்கும் தலைவர் தெரிவை மட்டக்களப்பில் நடத்துவதால் ஏற்படக்கூடிய பிரச்னையைச் சுட்டிக் காட்டி, யாழ்ப்பாணத்திலேயே தேர்தலை நடத்தும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார் பட்டிருப்பு எம். பி.

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் பதவிக்கு மூவர் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். ஒருவரான கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அபேட்சகர் மனுவை வாபஸ் பெற்று விட்டார்.





பட்டிருப்பு எம். பி. யுடன் நேரடியாக தலைவர் பதவிக்கு மோதிக் கொள்பவர் உடுப்பிட்டியில் தமிழரசு சார்பில்போட்டியிட்ட திரு. க. ஜெயக்கொடி ஆவார்.

மட்டக்களப்பில் தான் வெற்றி பெற்றால், தனது இடத்தில் வெற்றி பெற்று விட்டதாக ஒரு தவறான அபிப்பிராயம் நிலவக் கூடுமென்றும், ஆகையால் யாழ்ப்பாணத்திலேயே தலைவர் தேர்தலை நடத்தும் படியும் பட்டிருப்பு எம். பி. தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடாத்தவிருக்கும் பொதுச் சபை கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடாத்தி தலைவரை தேர்ந்தெடுப்பதே நல்லதென கேட்டுக் கொண்டுள்ளார்.

இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தலைவர் தேர்தல் நடைபெறும்.

# பண்டாரகம யு. என். பி.க்கு
# கே. டி. டி. பெரேரா பதவி இழந்தார்

## அப்பீல் விசாரணையில் தீர்ப்பு ஊர்ஜிதம்

கொழும்பு, ஞாயிறு

**ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த திரு. ஜோர்ஜ் கொத்தலாவலை பண்டாரகம எம். பி.யாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. கே. டி. பெரேரா பண்டாரகம எம். பி.யாகத் தெரிவுசெய்யப் பட்டது செல்லுபடியாகாதென முன்னர் வழங்கப் பட்ட தீர்ப்பு நேற்று ஊர்ஜிதம் செய்யப்பட்டதுடன் இரண்டாவது இடத்தைப் பெற்ற திரு. ஜோர்ஜ் கொத்தலாவலை எம். பி.யாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

விசாரணை நடைபெற்றது.

தான் பண்டாரகம எம். பி.யாகத் தெரிவுசெய்யப் பட்டது செல்லுபடியாகாதென்று முன்னர் சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து திரு. கே. டி. டி. பெரேரா அப்பீல்செய்திருந்தார்.

இந்த அப்பீல் விசாரணை பிரதம நீதியரசர் திரு. எச். என். ஜி. பெர்னாண்டோ, நீதியரசர்கள் ஏ. எல். சிறிமானே, வீரமந்திரி ஆகியோர் முன்னிலையில் நடை

திரு. கே. டி. டி. பெரேராவின் பதவி செல்லுபடியாகாதென்றும், ஜோர்ஜ் கொத்தலாவலை பண்டாரகம எம். பி.யாகத் தெரிவு செய்யப்படவேண்டுமென்றும் தெரிவித்தனர். நீதியரசர் ஏ. எல். சிறிமானே கே. டி. டி. பெரேராவின் பதவி செல்லுபடியாகுமென்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து திரு. பெரேராவின் பதவி செல்லுபடியாகாதென்றும், திரு. கொத்தலாவலை எம்.

# பாக. எதிர்க்கட்சிகளுக்கு இன்னுமொரு வெற்றி

ராவல்பிண்டி, பெப். 22

**பாகிஸ்தானில் டாக்கா சதிவழக்கு விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்தவழக்கில் பிரதான எதிரியான சேக் முஜிபுர்ரகுமானும் அவருடன் சேர்ந்த மற்றவர்களும் விடுதலை செய்யப் பட்டிருக்கின்றனர்.**

அயூப்கான் தாம் அடுத்த ஆண்டில் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் போட்டியிடப்போவதில்லையென்று அறிவித்தபின்னர் இந்த நடவடிக்கைஎடுத்திருக்கிறார்.

அயூப்கான் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் அரசியல் திட்டத்தில் மாற்றங்கள் செய்வதுபற்றி ஆலோசிக்க அழைப்பு விடுத்தபொழுது அங்கத்தவரை சதிவழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுசிறையிலிருக்கும் சேக் முஜிபுர்ரகுமானும் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ள அழைக்கப்பட வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அயூப்கானின் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இடையே எதிர்க்கட்சியினர் தமது பிரதான கோரிக்கையாக வைத்தனர். சேக் முஜிபுர்ரகுமானை பரோலில்விடுதலை செய்ய அரசு முன்பு இணங்கியது. ஆனால் இப்பொழுது சதிவழக்கையே விலக்கிக்கொண்டது மட்டுமன்றி சதிவழக்கு எதிரிகளையும் விடுதலை செய்ய

## தீர்ப்பளிக்கும் வரை

# வேலணை கிராமசபை தலைவர் ராஜினமா

அல்லைப்பிட்டி, ஞா.

வேலணைக் கிராமசபைத் தலைவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதக் கூட்டம் நேற்று நடைபெற இருந்தபோதும் மேற்படி கிராமசபைத் தலைவர் திரு. பு. சுப்பிரமணியம் இக்கூட்டம் நடைபெற முன்னரே தான் இராஜினமாச் செய்து விட்டதாக உதவி உள்ளூராட்சி ஆணையாளரிடம் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து பிரேரணை கூட்டத்தில் கொண்டுவரப்படவில்லை.

சபை அலுவலகத்திற்கு வெளியே பெருந்திரளான மக்கள் கூட்டம் குழுமியிருந்தது.

தமிழகத்துக்கு

## நோர்வே அரசு நன்கொடை

சென்னை, பெப். 22

காஞ்சிபுரத்தில் அண்ணா நினைவாக நிறுவப்படவிருக்கும் புற்றுநோய் கட்டுப்பாடு நிலையத்துக்கு நோர்வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...கிருர்.

அயூப்கான் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் அரசியல் ...களில் கலந்து கொள்ள அழைக்கப்பட வேண்டுமெ...

...யாக வைத்தனர். சேக் முஜி புர்ரகுமானை பரோலில்விடுதலை செய்ய அரசு முன்பு இணங்கியது. ஆனால் இப்பொழுது சதிவழக்கையே விலக்கிக்கொண்டது மட்டுமன்றி சதிவழக்கு எதிரிகளையும் விடுதலை செய்ய முன் வந்திருக்கின்றது. இத்தகவலை இன்று உள்துறை அமைச்சர் திரு ஏ. ஆர். கான் அறிவித்தார்.

...ஜித்... செய்யப்பட்டதுடன் இரண்டாவது இடத்தைப் பெற்ற திரு. ஜோர்ஜ் கொத்தலாவல எம். பி.யாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் கொழும்பு சுப்ரீம் கோர்ட்டில் தேர்தல் மனு மீதான தீர்ப்பு அப்பீல் ...தார்.

இந்த அப்பீல் விசாரணை பிரதம நீதியரசர் திரு ஏச். என். ஜி. பெர்னுண்டோ, நீதியரசர்கள் ஏ. எல். சிறிமானே, வீரமந்திரி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பிரதம நீதியரசர் ஏச். என். ஜி. பெர்னுண்டோவும் நீதியரசர் வீரமந்திரியும் ...ரசர் ஏ. எல். சிறிமானே கே. டி. டி. பெரேராவின் பதவி செல்லுபடியாகுமென்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து திரு. பெரேராவின் பதவி செல்லுபடியாகாதென்றும், திரு. கொத்தலாவல எம். பி.யாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளாரென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

பண்டாரகம இடைத்தேர்தலில் திரு. கே. டி. டி. பெரேராவுக்குக் கிடைத்த வாக்குகள்: 23,840.

திரு. ஜோர்ஜ் கொத்தலாவலைக்குக் கிடைத்த வாக்குகள்: 18,372.

...னரே தான் இராஜினுமாச் செய்து விட்டதாக உதவி உள்ளூராட்சி ஆணையாளரிடம் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து பிரேரணை கூட்டத்தில் கொண்டுவரப்படவில்லை.

இப் பிரேரணையை மேற்படி கிராமசபையைச் சேர்ந்த ஆறு அங்கத்தவர்கள் கொண்டுவர இருந்தனர். இதனை முன்னிட்டு பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆயினும் எதுவித பிரேரணையும் கொண்டு வரம்படவி...

## நன்கொடை

சென்னை, பெப். 22

காஞ்சிபுரத்தில் அண்ணு நினைவாக நிறுவப்படவிருக்கும் புற்றுநோய் கட்டுப்பாடு நிலையத்துக்கு நோர்வே அரசாங்கம் நன்கொடை வழங்க முன்வந்துள்ளது. புற்றுநோய் கட்டுப்பாட்டு நிலையத்தின் கட்டிடச் செலவுகளை நோர்வே அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். இக்கட்டிடப் பூர்த்தி வேலைகள் இன்னும் ஏழு அல்லது எட்டு மாதங்களில் பூர்த்தியாகும் எனத் தெரிகிறது.

# தீர்ப்பளிக்கும் வரை அங்கத்தவர்களுக்கு உரிமை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகரசபையின் இரு அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டது சரியல்ல என்று நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், பிரேரணைகளின் போது குறிப்பிட்ட இருவரதும் வாக்குகளையும் சேர்க்கக்கூடாதென்ற ஒரு சட்டப் பிரச்னையை யாழ்ப்பாண மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் அங்கத்தவரானதிரு. த. ச. துரைராஜா கிளப்பினர்.

ஆனல் இந்தச் சட்டப் பிரச்னை கிளப்பப்பட்ட அடுத்த நிமிடமே பல அங்கத்தவர்களும் இதற்கு ஆட்சேபம் தெரிவித்து கண்டனம்எழுப்பியதாடு அந்தப்பிரச்னையை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென்றும் கோரினர்கள்.

திரு. துரைராஜாவின் பிரச்னையை எதிர்த்து திரு. அ. விசுவநாதன் பேசுகையில், அங்கத்தவரது அபிப்பிராயம் வேறு, சபையின் அதிகாரம் வேறு என்றும், நீதிமன்றத்தின் தீர்ப்புக்கிடைக்கும்வரை 23 அங்கத்தவர்களுக்கும் ஒரே உரிமை சபையில் உண்டென்றும் சொன்னர்.

நீதிமன்றஉத்தரவு கிடைக்கும்வரை சகல அங்கத்தவர்களது வாக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படுமென இறுதியில் அறிவிக்கப்பட்டது.

(கா. நி.)

## சுருட்டுத்தொழிலாளர் குறைபாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுருட்டுத் தொழிலாளர்களுடைய தேவைகள் பூர்த்தியாக்கப் படவில்லையாம். சுருட்டுத் தொழிலாளர்களின் விஷயமாக தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு. சி. முதலியார் தொழில் கமிஷனரை இம்மாதம் 26ம் திகதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிருர்.

(ந. நி.)

# 'சியவச கல்வி சுவீப்பில் 6வயது சிறுவன்லட்சாதிபதி

கொழும்பு, ஞாயிறு

முதலாம் வகுப்பில் கல்வி பயிலும் 6 வயதுச் சிறுவனுக்கு 'சியவச' கல்வி சுவீப்பில் லட்சம் ரூபாய் பரிசு கிடைத்திருக்கிறது.

டிவலப் பிற்றியாவைச் சேர்ந்த ஐ. எம். சம்பின் சிங்கோ என்ற சாதாரண ஒரு தொழிலாளியின் மகனை இந்தச் சிறுவன் நேற்று கல்வி அமைச்சரிடமிருந்து தனது டிக்கட்டுக்கான லட்சம் ரூபாய் செக்கைப் பெற்றுக் கொண்டார். தந்தையார் இவரை கூட்டி வந்திருந்தார்.

வலங்கம்பய வித்தியாலயத்தில் இச்சிறுவன் கல்வி பயில்கிருன். "பணத்தை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று தந்தையாரைக் கேட்டதற்கு, தனது மகனின் கல்விக்கு 25 ஆயிரம் ரூபாவைச் செலவு செய்யப் போவதாகவும், ஆயிரம் ரூபாவை மகன் படிக்கும் பள்ளிக்கு நன்கொடையாகக் கொடுக்கப் போவதாகவும், காணி வாங்கி வீடொன்று கட்டி நிம்மதியாக வாழப் போவதாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு சபாநாயகர்

# புலவர் கோவிந்தன் போட்டியின்றி தெரிவு

சென்னை, பெப். 22

**தமிழ்நாடு கீழ்சட்டசபையின் சபாநாயகராக புலவர் கோவிந்தன் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்.**

தற்காலிக சபாநாயகர் திரு. நல்லசிவம், தலைமையில் இன்று காலை 9மணிக்கு சபாநாயகர் தெரிவு நடைபெற்றது. புலவர் கோவிந்தனைத்தவிர வேறு எவரும் இப்பதவிக்கு வேட்புமனு தாக்கல் செய்யாததால் அவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டதாக திரு. நல்லசிவம் அறிவித்தார். அதன்மேல்முதலமைச்சர் திரு. மு. கருணுநிதியும், எதிர்க்கட்சி கொறடா திரு. விஞயகமும் புலவர் கோவிந்தனை சபாநாயகர் ஆசனத்துக்கு அழைத்துச் சென்ருர்கள்.

புலவர் கோவிந்தன் பதவி ஏற்குமுன் காலஞ் சென்ற முதலமைச்சர் சி. என். அண் துரைக்கு அஞ்சலி செலுத்திஞர். தமது பதவியில் எந்தக்கட்சிக்கும் சார்பு இல்லாமல் தாம் கடமையாற்றுவார் என புலவர் கோவிந்தன் கூறிஞர். சபையின் இருதரப்பிலிருந்தும் புலவர் கோவிந்தனுக்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

அதன் பின்னர் சபை அலுவல்களைக்கவனிக்க ஆரம்பித்தது. அமரர் அண்ணுதுரை உயிருடன் இருந்தபோது கவர்ன்ர் நிகழ்த்திய உரையின்மீது சபைவிவாதத்தைத் தொடர்வதுகுறித்து எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு. விஞயகம் ஒழுங்குப் பிரச்னையொன்றைக்கிளப்பிஞர். இப்பொழுது இருப்பது வேறு அமைச்சரவையென்பதால் கவர்ணர் புதிதாகஉரைநிகழ்த்தவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டிஞர்.

பதவியிலிருப்பது பழைய கட்சியேதான் என்றும், அமரர் அண்ணுவின் கொள்கைகளையே கடைப்பிடிக்கப் போவதாக தற்போதைய முதலமைச்சர் அறிவித்திருப்பதாலும் புதிதாக கவர்னர் உரைநிகழ்த்தத் தேவையில்லை யென்றும் சபாநாயகர் தீர்ப்பளித்தார் அதன் மீது கவர்னர் உரைமீதான விவாதத்தைச்சபை ஆரம்பித்தது.

# யாழ். மாநகரசபையில் நிர்வாகமொழிப் பிரேரணை

## நீண்டவிவாதத்துக்குப்பின் அடுத்தகூட்டத்துக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ் மட்டுமே யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாக மொழியாதலால் ஆங்கிலத்தை எந்தச்சந்தர்ப்பத்திலும் பாவிக்கக்கூடாதென்றும், மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தமிழ்மொழி மூலம் தொடர்பு கொள்வதுடன் சிங்களமொழி பெயர்ப்பையும் இணைக்கவேண்டுமென்று கோரி கொண்டுவரப்பட்ட பிரேரணை யாழ். மாநகரசபையில் பலத்த எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

திரு. அ. விசுவநாதனுல் கொண்டுவரப்பட்ட இப்பிரேரணையை துணை முதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம், திருமதி அந்தோனியா சுவாமிநாதர், திரு. வி. சிவசுப்பிரமணியம் உட்பட பல அங்கத்நவர்களும் எதிர்த்துப் பேசிஞர்கள்.

சகல பகுதிகளிலும் சிங்களத்துககும் தமிழுக்கும் சம அந்தஸ்துக் கிடைத்த பின்னரே இதைச் செய்ய வேண்டுமென்றும், இன்று தமிழரசு, தமிழ் காங்கிரஸ் உட்பட சகல கட்சிகளுமே பிழையான வழியில் செல்கையில் இப்படிச் செய்தால் தமிழ் இன்னமும் புறக்கணிக்கப்படுமென்றும் துணை முதல்வர் இங்கு சுட்டிக்காட்டிஞர்.

கொட்டடியில் முஸ்லிம் மக்களுக்கென உள்ள முஸ்லிம் மையவாடியை மூட வேண்டுமென மா நகரசபை இல்லாத காலத்தில் முடிவு செய்யப்பட்டதால் 1968 ஆண்டு ஏப்பிரல் மாதம்4-ம் திகதி வர்த்தமானி அறிவித்தலை வழக்கொழிக்க வேண்டுமென சுகாதார அமைச்சரைக் கோரும் பிரேரணை என்ற திரு. ஏ. காதர் சமர்ப்பித்தார்.

இந்தப் பிரேரணைமீது திரு. தா. ச. துரைராஜாவிம், திரு. கே. வி. தெவ்வேந்திரமும், நீண்டநேரமாக இது பற்றி எடுத்துச் சொன்ஞர்கள். ஐஞப் எம். ஜி பஸீர், திரு. காதர் உட்பட இன்னும் பல அங்கத்தவர்கள் இது பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதாக சபையில் தெரிவித்ததால் இதுபற்றி விவாதிக்க இம் மாதம் 26-ம் திகதி விஷே கூட்டம் கூடுவதென முடிவு செய்யப்பட்டது.

### இலவச பாடப் புத்தகம்

ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகம் வழங்க ஒரு பாகுபாடற்ற குழுவைத் தெரிய வேண்டுமென திரு. ஆ. துரைராஜசிங்கம் கொண்டு வந்த பிரோரணை ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

திரு. ஆ. துரைராஜசிங்கம், திரு. அ. விசுவநாதன், திருமதி அந்தோனியா சுவாமிநாதர், திரு. என். அந்தோனிப்பிள்ளை, திரு. அ. நடராஜா ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவும் இதற்கெனத் தெரியப் பட்டது.

கொட்டடி விஷக்கடிவைத்தியர் திரு. சிற்றம்பலத்தின் இடமாற்றத்தை ரத்துச் செய்யக்கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சுகாதாரக்குழு, மின்சாரக் குழு, மராமத்துக்குழு, நிதிக் குழு ஆகியவற்றின் சிபார்சுகள் பரிசீலனை செய்யப்பட்டதோடு சில ஏற்று.க்கொள்ளப்பட்டன.

### 'சமாளிபபு பரிசீலனை'

'சமாளிப்பு' என்ற சொல்லுக்குப் பதிலாக ஒரு சரி

(4-ம் பக்கம் பார்க்க)

# என்னைப்பற்றி தவருன விஷமப் பிரச்சாரம் செய்யப்படுகிறது

## ஆட்சிமன்றத்தில் தொழிலமைச்சர் முகமத

கொழும்பு, சனி

"என்னைப் பற்றித் தவருன விஷமப் பிரசாரஞ் செய்யப்படுகிறது. சமீபத்தில் நான் புதுடில்லியில் நடைபெற்ற ஆசிய தொழிலமைச்சர்கள் மாநாட்டுக்குச் சென்றிருந்தேன். என்னுடன் எனது 22 வயது மகனும், 17 வயது மருமகளும் நேர்த்திக்கடன் ஒன்றைக் கழிப்பதற்காக வந்தனர். திரும்பி வரும்போது எனது மருமகளின் பையுக்குள் சேலைகள் இருந்ததால் 500ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. இது உடனே செலுத்தப்பட்டது. இது ஒன்றை வைத்துக்கொண்டு தேவையற்ற விதத்தில் பெயர் குறிப்பிடாமல் என்னைப் பற்றி விஷமப் பிரசாரஞ்செய்யப்படுவது மன வேதனையளிக்கிறது."

எட்டியாந்தோட்டை எம். பி. டாக்டர் என். எம். பெரேரா நேற்று ஆட்சிமன்றத்தில் கிளப்பிய பிரச்னை சம்பந்தமாகத் தொழில் அமைச்சர் எம். ஏச். முகமத் இன்று ஆட்சி மன்றத்தில் பதிலளித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. எம். ஏச். முகமத் இதுபற்றிப் பேசுகையில் தெரிவித்ததாவது:

"என்னைப் பற்றிச் சுங்க இலாகாவுக்கு மயில்வாகனம் என்பவர் சத்தியக்கடுதாசி ஒன்றை முடித்துத் தகவல் கொடுத்ததாக எட்டியாந்தோட்டை எம். பி. குறிப்பிட்டிருந்தார். இந்த மயில்வாகனம் தன்னை எனது அந்தரங்கக் காரியதரிசியாக நியமிக்கச் சொல்லிக் கேட்டிருந்தார். ஆனல் இவர் நேர்மை யற்றவராகையால் நான் இவர் கோரிக்கைக்கு இசையவில்லை. தன்னை ஓர் ஓய்வுபெற்ற என்ஜினியர் என்று இந்த மயில்வாகனம் சொல்லிக் கொள்வார். ஆனல் இவர் ஒரு பழைய ஓவசியர். இப்போது டாக்டர் என். எம். பெரேராவுடன் சேர்ந்துகொண்டு என் மீது தவருனபிரசாரங்களில் ஈடுபட்டுள்ளார்.

எதிர்க்கட்சியினர் இதுசம்பந்தமான முழு விளக்கமும் தேவையெனக் கேட்டதைத் தொடர்ந்து பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, தான் இல்லாத சமயத்தில் தன்னைக் கேட்காமலேயே தொழிலமைச்சர் அறிக்கை விட்டுவிட்டாரென்றும், அடுத்த முறை இதுபற்றிய முழு விபரமும் அறிவிக்கப்படும் என்றும் வெரிவித்தார்.

சிங்கள தேர்ச்சிபெருத

# சிறு ஊழியர்களுக்கும் வேலைநீக்க முன்னறிவித்தல்

அளவெட்டி, சனி

வடபகுதியில் சிங்களத் தேர்ச்சி பெருத தமிழ் அரசாங்க சிறு ஊழியர்களுக்கும் வேலை நீக்க முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைதபால் நிலையத்தில் சமையல்காரராகக் கடமையாற்றும் திரு. அ. பொன்னுத்துரை என்ற சிறு ஊழியருக்கு இந்த வேலைநீக்க உத்தரவு கிடைத்துள்ளது.

இவர் சிங்களம் படிக்கவில்லை என்ற காரணத்தால் அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். தபால் பகுதி நிரந்தரக் காரியதரிசி இத்தகவலை இவருக்கு அனுப்பியுள்ளார்.

இவர் நியமனம்பெற்ற போது சிங்களம் படிக்க வேண்டுமென்று நிபந்தனைக் கடிதத்தில் குறிக்கப்படவில்லையாம். பின்பு இவருடைய சேவை உறுதிப்படுத்தப்பட்டபோதும் சிங்களம் படிப்பது பற்றியோ அல்லது சிங்களப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ருே அறிவிக்கவில்லையாம். இந்த வேலைநீக்க நோட்டீஸ் கிடைக்கும் வரை இவருக்கு சிங்கள தகைமை தேவையென மேலதிகாரியோ அல்லது பகுதித் தலைவரோ அறிவிக்கவில்லையாம்.

## உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பூநகரி அரசினர் வைத்தியசாலை உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக திரு. கே. தனபாலசிங்கம் சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பூநகரி கி. ச. 4-ம் வட்டார உறுப்பினரும், சக்தி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ந. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

I. R. 8 விதை நெல்லும் S. R. 26 விதை நெல்லும் விற்பனைக்குண்டு. புசல் ரூபாய் 20/-. இலக்கம் 23, கன்னுதிட்டி ரேட், யாழ்ப்பாணம். 685

## தேவை

அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை, பாண், பிஸ்கற் தயாரிப்பாளர்கள் உடனே தேவை. வேல்ஸ் பேக்கரி, முரசுமோட்டை, பரந்தன். 688

யாழ்ப்பாணத்தில் கார்கள் வாங்கவும், விற்கவும், மாற்றுவதற்கும், ட்றேட் அன்ட் ட்ருன்ஸ்போர்ட் கம்பனி லிமிட்டட் ஒவ்வொரு போயா முன்தினத்திலும், ஒழுங்குசெய்திருக்கின்றது. பெப்ரவரி 23ல் ஆரம்பம். தொலைபேசி எண் 375. 692

பிரபல அச்சகத்திற்கு மனேச்சர் தேவை. ரொக்கப்பிணை ரூபா 2000/- செலுத்தக்கூடியவர்கள் மட்டும் 28-ம் திகதிக்கு முன் விண்ணப்பியுங்கள். பொறுப்பாளர், 68, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 694


# இன்றைய பலன்

ஞாயிற்றுக்கிழமை (23-2-69)

மாசி மாதம், 12 ௳

திதி- சப்தமி இரவு 11-24 மேல் அட்டமி.

நட்சத்திரம்- கார்த்திகை.

ராகுகாலம் 5-01— 6-31.

சுபநேரம்- 9-31 — 11-01.

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு சமயோகமான பலனையே குறிப்பிடுகின்றது. வருமானம் திருப்திகரமாக இருப்பினும் செலவுகளும் அதிகப்படியாகவே இருக்கும். விருந்தினர்கள் வருகை உங்களுக்குத் தொல்லையைத் தரலாம். விவசாயிகள் அதிக விளைச்சலை எதிர்பாக்க முடியாது. சிலர் இரத்த அழுத்தம்சம்பந்தப்பட்ட நோயினால் பாதிக்கப்படலாம்.

# உரும்பராய் செய்திகள்

— நமது நிருபர் —

### 'சியவச' ஆறுதல் பரிசு

கல்வி நூற்றுண்டு விழாச் சபையினரால் நடத்தப்பட்ட கல்விசுவீப் சிட்டிழுப்பில் (சியவச) ஆறுதல் பரிசு ஒன்று உரும்பராய் இந்துக் கல்லூரி மாணவிக்கு கிடைத்துள்ளது. ரூபா 1000பெறும் இவரின் பெயர் பத்மினி செல்லத்துரை.

0 0 0

### கிராம சேவகர் இல்லாமல் கஷ்டம்

உரும்பராய்ப்பகுதிக்கென ஒரு கிராமசேவகர் இல்லாததால் இங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இப்பகுதியில் கடமையாற்றிக்கொண்டிருந்த கிராம சேவகர் ஒருவர் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டதைத்தொடர்ந்து தற்போது இப்பகுதியை ஊரெழு கிரர்ம சேவகர் தற்காலிகமாகக் கவனித்துவருகிறார்.

வெள்ள அழிவிற்கான 2-ம் கட்ட உதவி காரியாதிகாரி பிரிவில் கிடைக்கப்பெற்றும் இங்கு முழுநேர கிராமசேவகர் இல்லாததால் இப்பணத்தைப்பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிகிறது.

0 0 0

### அண்ணுவுக்கு அனுதாபம்

அறிஞர் அண்ணுவின் மறைவு குறித்து ஓர் அனுதாபத் தீர்மானத்தை உரும்பராய்-ஊரெழு பொதுமக்கள் சார்பாக உரும்பராய் பட்டின சபை திருமதி ராணி அண்ணுதுரைக்கும், தமிழக முதலமைச்சரான திரு. கருணாநிதிக்கும் அனுப்பிவைத்துள்ளது.

0 0 0


உரும்பராய் இளைஞர் விவசாயக் கழகமும் மறைந்த தலைவர் திரு. ஸி. என். அண்ணுதுரையின் ஆத்ம சாந்திக்கான அனுதாபத் தந்தியொன்றை திருமதி ராணி அண்ணுதுரைக்கு அனுப்பிவைத்துள்ளது.

0 0 0

### மின்சாரம்

உரும்பராய் பட்டின சபைப்பகுதிகளுக்கான புதிய மின்சார விநியோகம் சில தாமதங்களைத் தொடர்ந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது ஏப்ரல்மாத பிற்பகுதியில் மின்சாரம் விநியோகம் செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

0 0 0



யானை மார்க் குளிர்பானங்கள் போத்தல்மூடி 75,000 பரிசுப்போட்டியில் முதலாவது பரிசான 1500 ரூபா மொரட்டுவைச் சேர்ந்த திரு. ஜி மெண்டிஸ் என்பவருக்குக் கிடைத்துள்ளது.

32 வயதான திரு. ஜி. மெண்டிஸ் தச்சுவேலைபார்க்கிறார். திருமணமானவர்; லுணுவையில் குடும்பத்துடன் வாழ்கிறார்.

யானை மார்க் குளிர்பான போத்தல்களைச் சேகரிக்க இவருக்கு இவரது இரண்டு மகன்களும் உதவிசெய்வார்களாம். மதுபானப் பிரியரான இவர், தான் குடிக்கும் சாராயத்துடன் கலக்க யானை மார்க் சோடா வாங்கியபோது - அதுவும் யாழ்தேவி புகைவண்டிச் சிற்றுண்டிச் சாலையில் வாங்கிய போதுதான் - பரிசுக்குரிய சோடா போத்தல்மூடி இவருக்குக் கிடைத்ததாகக் கூறுகிறார்.

யாழ்ப்பாணத்தில், யானை மார்க் குளிர்பானங்கள் போத்தல் மூடிப் போட்டிக்கு பெரும் வரவேற்பிருப்பதாக கம்பெனி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

# நெடுந்தீவு பிரயாண சேவையில் அபிவிருத்தி

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவு குறிகாட்டுவான் படகு சேவையில் பெரும் சீர்திருத்தம் ஏற்பட்டுள்ளது. தினமும் இச் சேவையை இரண்டு தடவைகளில் இருந்து மூன்றுதடவையாக அதிகரிக்கவும், இம்மாதம் 15-ந் திகதியில்இருந்து இதனை அமுல் நடத்தவும் அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார். தற்போதுள்ள நான்கு மோட்டார் படகுகளுடன் புதிதாக ஒரு மோட்டார்படகு இரண்டு லட்சம் ரூபாவிற்கு கட்டவும்அமைச்சர்ஒப்புக்கொண்டார்.

நெடுந்தீவு பஸ்சேவையை விஸ்தரிக்கவும், மேலதிக பஸ் வண்டியையும் நெடுந்தீவிற்கு அனுப்பி வைக்கவும் தேசியமய சேவைகள் அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்

நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் திரு- அ. த. அம்பலம் யாழ்ப்பாண ஆட்சி மன்றப் பிரதிநிதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோர் இரு அமைச்சர்களையும் சந்தித்துப் பேசினர்.

# மாவிட்டபுரத்தில் அடித்து தாக்கியதாக வழக்கு

## சாட்சியம் முரண்பாடு; எதிரிவிடுதலை

குரும்பசிட்டி, சனி

அரியாலையைச் சேர்ந்த சின்னப்பு கணேசன் என்பவரை கடந்த வருடம் ஆடி மாதம் 17-ம் திகதி அடித்துத்தாக்கி காயம் விளைவித்ததாக மாவிட்டிபுரம் வாசியான இளைய தம்பி இராசையா என்ப... பத்திரியில் வாக்குமூலம் அளித்தேன்.

அடுத்து பீ. சின்னத்துரை என்பவரும் சாட்சியளித்தார். சாட்சிகள் எதிரி தரப்பு ... விசாரணை செய்யப் ...டனர். விசாரணைமுடிவில் ...ட்சிய முரண்பாடு காரண...

# தீவுப்பகுதி மக்கள் தரிசனத்துக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்தோனேஷியாவைச் சேர்ந்த பாலித்தீவு என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கபால விநாயகர் விக்கிரகம் தீவுப்பகுதி மக்களின் தரிசனத்திற்காக இம்மாதம் 25-ம் திகதியிலிருந்து 27-ம் திகதிவரை வைக்கப்படும்.

25-ம் திகதி புங்குடுதீவு மகா வித்தியாலயத்திலும் 26-ம் திகதி நயினாதீவு மகா வித்தியாலயத்திலும் 27-ம் திகதி வேலணை மத்தியமகா வித்தியாலயத்திலும் வைக்கப்படுவதோடு இங்குள்ள கோவில்களுக்கு ஊர்வலமாகவும் எடுத்துச் செல்லப்படும். (கா. நி)

# பொலிஸ் பாதுகாப்பில் மாமூடைகள்

அளவெட்டி, ஞாயிறு

இரு மாமூடைகளை தலைச்சுமையில் கடத்திக்கொண்டு செல்ல முயற்சித்த இருவர் பொலிஸாரைக் கண்டதும் மாமூடைகளை வீதியில் போட்டுவிட்டு ஓடிவிட்டனராம்.

காங்கேசன்துறை வீதியால் இவர்கள் சென்றுகொண்டிருக்கையில் காங்கேசன்துறைப்பொலிஸ் பகுதியைச் சேர்ந்த சில்வா, திஸநாயகா ஆகிய இருவரும் இரவு ரோந்து சுற்றி வந்துகொண்டிருந்த போது இவர்களைக்கண்டதும்மூடைகளை வீதியில் போட்டுவிட்டு ஓட்டம்பிடித்தனராம். இவர்களைப்பிடிக்க பொலிஸார் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லையெனத் தெரிகிவிக்கப்பட்டது

இந்த மாமூடைகள் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டதோடு பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

# விசித்திரக் கன்றுக்குட்டி

அளவெட்டி, ஞாயிறு

மூன்றுகால்களுடன் கன்றுக்குட்டி ஒன்று நேற்று முன்தினம் மாலை வசாவிளானில் பிறந்தது.

பலாலி தெற்கு வசாவிளானைச் சேர்ந்த வி. சின்னத்துரை என்பவருக்குச் சொந்தமான பசுவே மூன்று கால்களையுடைய இக்கன்றை ஈன்றது.

இக்கன்று முக்... சில உறுப்புகள் அற்ற...கவும் காணப்பட்டது. இதைப் பலர் பார்வையிட்டனர். இக்கன்றுக்குட்டி பிறந்த சிலமணி நேரத்தில் இறந்துவிட்டது.

# உள்ளூராட்சி அமைச்சர் கிராமசபைக்கு வராததேன்?

## தலைவர் அளித்தபதில்

உடுப்பிட்டி, சனி

'உள்ளூராட்சி அமைச்சரின் வடபகுதி விஜயத்தில் அரசியல் கட்சி எம். பிக்களே அதிக இடம் பெற்றனர். இந்த எம். பிக்களின் முட்டுக் கட்டையினால் கிராமசபைகள் அமைச்சரை வரவேற்க முடியாமல் போய்விட்டன. உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அசிரத்தையும் உள்ளூராட்சி அமைச்சர் இங்கு வருவதற்குத் தடையாக இருந்துவிட்டது. ஒவ்வொரு எம். பிக்களும் போட்டி போட்டுக் கொண்டு அமைச்சரை வரவேற்றனர். இதனால் எம்மால் ஒன்றுஞ் செய்ய முடியாமல் போய் விட்டது.''

இவ்வாறு உடுப்பிட்டிக் கிராமசபை மாதாந்தக் கூட்டத்தில் 22-ம் வட்டார அங்கத்தவர் திரு க, அண்ணமலையின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் கூறினார். உள்ளூராட்சிஅமைச்சர் பிரேமதாசா உடுப்பிட்டிக் கிராமசபைக்கு விஜயம் செய்யாததற்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டுமென்ற பிரேரணையைத் தலைவர் நிராகரித்தார்.

இங்கு அறவிடப்படும் சீவல் வரியில் கிராமசபைக்கும் ஒரு பகுதி தரவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கோருவதென்றும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளின் நிவாரணத்திற்கு 12,000 ரூபா செலவிடுவதென்றும். புதிய அலுவலகத்திற்கென வாங்கிய கதிரைகள் வைக்க இடமுல்லாததால் மேலதிக கதிரைகளை 23-ம் திகதி ஏலத்தில் விற்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பருத்தித்துறையிலிருந்து கீரிமலைக்குப் புதிதாகப் பஸ் சேவை ஒன்று ஆரம்பித்து வைக்கப் படவிருக்கிறது. இப்பஸ்ஸை நெல்லியடி, குஞ்சர்கடை, உடுப்பிட்டி, தொண்டமனாறு ஊடாகக் கீரிமலைக்குச் சேவையிலீடுபடுத்துமாறு வடபகுதி பிராந்திய இ. போ. ச. முகாமையாளரைக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டு உள்ளது.

# காணிகளின் வரிஉயரவில்லை மதிப்பீடுதான் உயர்ந்தது

## திரு. விசுவநாதன் விளக்கம்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் காணிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரிஉயர்த்தப்படவில்லையென்றும் காணிகளின் வருமான மதிப்பீட்டின் அடிப்படைதான் உயர்வுக்கு காரணமென்றும் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் திரு. அ. விசுவநாதன் தெரிவித்துள்ளார். அவரது விளக்கம் வருமாறு:

யாழ். நகரசபை எல்லைக்குள் இருக்கும் காணிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி 12 1/2 விகிதத்திலிருந்து 30 விகிதத்துக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது எனக் கூறுவது தவறு. ஆனால் கடந்த வருடம்மாநகரசபையைநிர்வகித்த ஆணையாளர் வரவு செலவுத்திட்டத்தைஆக்கிய பொழுது புதிதாக காணிகளின் வருமான மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படையிலிருந்து இவ்வருடத்தின் வருமானம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் 1969-ம் ஆண்டிற்கு 11 லட்சத்து 60 ஆயிரத்து 625 ரூபா வரிவருமானமாகப் போடப்பட்டுள்ளது. இந்த வருமானம் 1968-ம் ஆண்டின் வரிவருமானத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் 3 லட்சத்து 77 ஆயிரத்து 959 ரூபா அதிகமாக இருக்கின்றது. இந்த மேலதிகமான தொகை 1968-ம் ஆண்டின் வருமானத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சராசரியாக 45 சத விகிதம் அதிகரித்துள்ளது எனக்கூறலாம். 1969-ம் ஆண்டின் வரவு...

# ஈழத்தமிழ் மன்றம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

தமிழர் நாரீகத்தையும் தமிழர் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பேணவும், தமிழர் கலைகளுக்கு ஊக்கம் தரவும் கொழும்பில் ஈழத்தமிழ் மன்றம் என்ற பெயரில் ஒரு மன்றம் உருவாக்கப்பட்டுள்...

# மீனவர் தடுமாற்றம்

காங்கேசன்துறை, வெள்ளி

கோவளம் வெளிச்சவீட்டில் இருக்கும் மின்சார விளக்கு பழுதடைந்துள்ளதால் மயிலிட்டி, காங்கேசன்துறை, பலாலி, கீரிமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடித்துவிட்டு இரவில் கரை திரும்புகையில் திசை தெரியாது தடுமாறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணத்தால் ஆழ்கடலில் மீன்பிடிக்கச்செல்லும் இயந்திரப் படகுகள் நேரம் தவறி கரை திரும்புவதாகவும் இவற்றை நிவர்த்திசெய்ய இவ் வெளிச்சவீட்டை உடனடியாகதிருத்தித் தரும்படியும் மின்சார இலாகாகாவைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று காங்கேசன்துறைப் பட்டினசபைக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற பொழுது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.


மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா. போயா 2-30 மணி
அசோகன் - K. R. விஜயா நடித்த
**காட்டுராணி**

41வது தினம்!
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா மற்றும் பலர் நடித்த
**ஒளி விளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த
**குடியிருந்த கோயில்**

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி — சாவித்திரி நடித்த
**அன்னையின் ஆணை**

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தொல்லையைத் தரலாம். விவசாயிகள் அதிக விளைச்சலை எதிர்பாக்க முடியாது. சிலர் இரத்த அழுத்தம்சம்பந்தப்பட்ட நோயினால் பாதிக்கப்படலாம்.

மேஷம்- சூழ்ச்சிமிகுதி, சோதனைக் கட்டம்.

ரிஷிபம்- கோபப் பார்வை, கொள்கையில் கோணல்

மிதுனம்- தனச்சிறப்பு, தானியவிருத்தி.

கடகம்- தடைகள் தாக்கும், தாமதமிகுதி.

சிம்மம்- அன்னையின் ஆணை, அமைதிக்கு வழி.

கன்னி-பாக்கியவிருத்தி பரம்பொருள் சிந்தை.

துலாம்- எதிரிபகை ஏக்கமிகுதி.

விருச்சிகம்- களஸ்திர சுகம், கண்ணியம்சேரும்.

கன்னி- தொழிலில் தொல்லை, துன்பந் தொடரும்.

மகரம்- பிதாவழிச் சிறப்பு, மேலிடத்து ஆதரவு.

கும்பம்- செய்தொழில் கிறப்பு, தெய்வத்தின் துணை.

மீனம்- பூமி லாபம் பொருள்வரவு.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**ஞாயிறு 23 2—69**

**(செய்திகள் காலை 7-00 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00.)**

**344 மீ. அன் 61 மீ.**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-15 இஸ்லாமியகிதங்கள்.

**344 மீ. அன் 49 மீ.**

பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 இளைஞர் மன்றம்.

**344 மீ. அன் 61 மீ.**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 நேயர்விருப்பம், 6-30 கானமஞ்சரி, 6-45 பேச்சு, 6-55 வாத்தியஇசை, 7-00 மத்தாப்பு, 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 உரைச்சித்திரம், 10-00 வாத்திய இசை.

தாமதங்களைத் தொடர்ந்து தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது ஏப்ரல்மாத பிற்பகுதியில் மின்சாரம் விநியோகம் செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

0 0 0

### ப. ச. திட்டம்

மழைகாலங்களில் உடும்பராய்ப் பகுதியில் ஏற்படும் வெள்ளச் சேதங்களைத் தடுக்க உடும்பராய்ப் பட்டின சபை ஒரு திட்டம் மேற்கொள்ள விருப்பதாகத் தெரிகிறது ரேட்டுக் கரைகளில் வெள்ளம் போவதற்கான வாய்க்காலை வெட்டி அவ்வாய்க்காலை உடும்பராய்-கோப்பாய் ஊடாக கோப்பாய் கடலில் சேர்ப்பதே அத்திட்டமாகும். இவ்வருட பிற்பகுதியில் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படலாமெனவும் நம்பப்படுகிறது.

0 0 0

### அரங்கேற்றம்

கடந்த சிவராத்திரி விழாவின்போது உடும்பராய் கிழக்கு பூதராயர் கோவிலில் உடும்பராயைச் சேர்ந்த செ.பா. சிவலோகநாதன், க. விக்னேஸ்வரன் குழுவினரின் வில்லுப்பாட்டு அரங்கேற்றப்பட்டது.

0 0 0

### பயிற்சிபெறுவர்

கிளிநொச்சி மலேரியா தடுப்புப் பகுதியில் கடமையாற்றிய உடும்பராயைச் சேர்ந்த திரு. ச. கந்தசாமி அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் கொழும்பில் மலேரியா இரத்தப் பரிசோதனையில் 3 மாதப்பயிற்சி பெறுவார்.

0 0 0

### கிரிக்கெட

உடும்பராய் பிறைட் டைகேர்ஸ் கிளப்பிற்கும், வண்ணார்பண்ணை விளையாட்டுக் கழகத்திற்குமிடையே சிநேகித பூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் பிறைட் டைகேர்ஸ் வெற்றியீட்டியது.

பிறைட் டைகேர்ஸ் கிளப்பிற்கு பி. சண்முகநாதனும், வண்ணார்பண்ணை விளையாட்டுக் கழகத்திற்கு எஸ். பிரேம்குமாரும் தலைமை தாங்கினர்.

உரும்பராய் பிறைட்டைகர்ஸ் கிளப் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திருவாளர்கள் பி, கிரிதரனும். எஸ். சித்தாத்தனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

0 0 0

### ஒன்றுக்குப் பத்து

தீவிரமாக அறுவடைசெய்யப்பட்டுவரும் உருளைக் கிழங்கு வேளாண்மையில் உரும்பராய் கிழக்கைச்சேர்ந்த திருமதி சின்னம்மா செல்லத்துரை இப்பகுதியில் கூடுதல் விளைச்சலைப் பெற்றுள்ளார்.

ஒரு அந்தருக்கு பத்து அந்தர் வீதம் ஏழு அந்தர் கிழங்கு பயிரிட்டு எழுபது அந்தர் உருளைக் கிழங்கை இவர் அறுவடைசெய்துள்ளார்.

சின்னப்பு கணேசன் என்பவரை கடந்த வருடம் ஆடி மாதம் 17-ம் திகதி அடித்துத்தாக்கி காயம் விளைவித்ததாக மாவிட்டிபுரம் வாசியான இளைய தம்பி இராசையா என்பவர் மேல் காங்கேசன்துறைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது காயமடைந்த கணேசன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- சம்பவதினம் பகல் ஒரு மணியளவில் மாவட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலிருந்து வழிபாட்டின் பின்னர் வீடு செல்ல பஸ் எடுக்க வீதிக்கு வந்தேன். வீதியில் சென்றுகொண்டிருக்கையில் என்னுடன் வேறு ஒருவரும் கூட வந்தார். அந் நேரம் எமக்குப் பின்புறம் ''பிடியடா உவங்களை'' என குளறும் சத்தம் கேட்டது. சத்தம் கேட்டதையடுத்து எதிரி வந்து எனது நெஞ்சில் பிடித்து கைகளால் அடித்தார். அப்போது பின்புறமாக இரும்புப் பைப் போன்ற ஆயுதத்தால் தலையில் தாக்குதல் விழுந்தது. இதனால் உடனே மயக்கமடைந்து நிலத்தில் வீழ்ந்தேன். பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். பொலிசாருக்கு ஆஸ்பத்திரியில் வாக்குமூலம் அளித்தேன்.

அடுத்து பீ. சின்னத்துரை என்பவரும் சாட்சியளித்தார். சாட்சிகள் எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டனர். விசாரணைமுடிவில் சாட்சிய முரண்பாடு காரணமாக நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

எதிரி சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். பொலிஸ் இன்பெக்டர் அமீன் வழக்கை நடத்தினார்.

## நெடுந்தீவு குடிநீர் கஷ்டம் நீங்கும்

நெடுந்தீவு, சனி

நெடுந்திவு குழாய் நீர் விஸ்தரிப்பிற்காக பலவருடங்களாக அடையாள மானியமாக 10 ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நெடுந்தீவிற்கு அண்மையில் விஜயம் செய்த உள்ளூராட்சி மந்திரி பிரேமதாசா அளித்திருந்த வாக்குறுதியின் பயனாக தற்போது நெடுந்தீவு குடிநீர் குழாய் விஸ்தரிப்புக்கு 62 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அறியப்படுகிறது. இது விஷயமாக உள்ளூராட்சி அமைச்சின் பொறியியலாளர் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூடிய கெதியில் அமுல் நடத்தவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## புதிய உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் ஐயனார் கோவிலடி சனசமூகநிலைய புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு வே. பொன்னம்பலம், உபதலைவர் திரு. எஸ். சிவசோதி, செயலாளர் திரு ரி. ஜெயகுமார், உப செயலாளர்: திரு. ரி. சச்சிதானந்தன். பொருளாளர்: ரி. பஞ்சநாதன். நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ந.நி)

0 0 0

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு பத்தாம் வட்டார இராஜஇராஜேஸ்வரி சனசமூக நிலையத்தின் ஆண்டுக் கூட்டத்தில் பின்வருபவர்கள் புதிய உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. சின்னத்துரை, உபதலைவர் திரு. வி. பசாலிங்கம், காரியதரிசி திரு. மா, க. வைத்தியநாதன், தனதிகாரி: திரு. த. கிருஷ்ணசாமி.

நிர்வாகசபை யொன்றும் அமைக்கப்பட்டது.

0 0 0

மட்டுவில், ஞாயிறு

மட்டுவில் போகனதாஸ் சனசமூக நிலையத்தின் மொதுக்கூட்டம் 15-ம் திகதி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. சி. சண்முகம் தலைமையுரை நிகழ்த்துகையில், கடந்த காலத்தில் நமது சாதனைகளையும் நாம் விட்டதவறுகளையும் ஒரு பாடமாகக் கொண்டு எதிர்காலத்தில் நமது மக்கள் சமுதாயம் மிக உன்னதமான நிலையடைய பாடுபடவேண்டும். பின்தங்கியுள்ள சகல மக்களதும் ஐக்கியத்தைஏற்படுத்துவதும் புரட்சிகரமான கொள்கைகளை மேற்கொள்ளுவதும் நமக்கு முன்னுள்ள அவசியமும் அவசரமுமான பெரிய பொறுப்புக்களாகும்'. என்று குறிப்பிட்டார்.

நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு.க. பொன்னுத்துரை சாரியதரிசி: திரு வே. கிருஷ்ணன், தனதிகாரி: திரு. வே. யேசுதாசன்? கலைக்கழகக் காரியதரிசி: திரு. க. சுப்பையா நூலககாரியதரிசி திரு. க. இராசா, விளையாட்டுக்கழக காரியதரிசி: திரு. க. ஜீவகதாஸ், கணக்குப்பரிசோதகர்: திரு. க. முருகேசு பன்னிரண்டுபேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இக்கன்று முக்கி... சில உறுப்புகள் அற்றதாகவும் காணப்பட்டது. இதைப் பலர் பார்வையிட்டனர். இக்கன்றுக்குட்டி பிறந்த சிலமணி நேரத்தில் இறந்து விட்டது.

## உயர் கல்விக்கு கனடா சென்றார்

புத்தளம், சனி

கனடா - வன்குவீவர்வேதாகமமன்றத்தினரால்ஏற்பாடு செய்யப்பட்டும், பொறுப்பேற்றும் தெரியப்பட்டு உயர்தர மேற்படிப்புக்காக திரு, ஆர். ரவிச்சந்தரரேய் ரி. டபிள்யு. ஏ. விமான மூலம் சென்ற 15-ம் திகதி கனடா சென்றுள்ளார். இவர் திரு. ஏ. இரத்தின சபாபதியின் புதல்வரும் ஹொலிவூட்வாண பிறதர்ஸைச்சேர்ந்த திரு. ஜெயசீலன், லொசேஞ்சல்ஸ்சவுத் நியூ ஹாம்ஷயரைச் சேர்ந்த திரு. ஸ்ரீ பத்மநாதனினதும் சகோதரருமாவார்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை ஸாகிரு மகா வித்தியாலயத்திலும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும், பின்னர்யாழ்ப்பாணம் பரிசுத்த யோவான் கல்லூரியிலும் கற்றார், இக்கல்லூரியில் விளையாட்டு வீரராக பலவித விளையாட்டுக்களிலும் உதைபந்தாட்டத்திலும் பங்குகொண்டார்.

இவர் மாணவர் தலைவராகவும், யாழ். கிறிஸ்தவ மாணவ சங்கத்தின் தலைவராகவும், யாழ். நாடக சங்கத்தின் உறுப்பினராகவும் கல்லூரியின் பாடக சங்கத்தின் அங்கத்துவராகவும் பங்குகொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாருடைய 'பாஸ்போர்ட்'

1968-ம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியா செல்வதற்காக எடுக்கப்பட்ட ஒரு 'பாஸ்போர்ட்டை' கொக்குவிலைச் சேர்ந்த ஒரு பெண் தொலைத்து விட்டார். அந்தப் பாஸ்போர்ட் கண்டெடுக்கப் பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழர் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பேணவும், தமிழர் கலைகளுக்கு ஊக்கம் தரவும் கொழும்பில் ஈழத்தமிழ்மன்றம் என்ற பெயரில் ஒரு மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்பு, சேரி ஒழிப்பு, தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தல், தமிழ்மொழியில் விஞ்ஞான, கலை, தொழில்நுட்ப நூல்கள் தோன்ற ஆவன செய்தல், புதிய கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் சந்தர்ப்பமளித்து ஊக்குவித்தல், மாணவர்கள் மனதில் தமிழ்ப்பற்றை வளர்த்தல், பிறநாடுகளிலிருந்து சிறந்த பேச்சாளர்களை வரவழைத்து உரையாற்ற ஏற்பாடுகள் செய்தல், ஊர்கள் தோறும் தமிழ் விழாக்களை நடத்துதல், சிறந்த சமூக சீர்நிருத்த நாடகங்களை உருவாக்கி அரங்கேற்றல். இம்மன்றத்தின் நோக்கங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலட்சார்ச்சனை

சுழிபுரம், சனி

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் தேவஸ்தான இலட்சார்ச்சனை நேற்றுத் தொடக்கம் பத்துத் தினங்களுக்குத் தினசரி காலையும் மாலையும் நடைபெறும்.

தினமும் காலை எட்டுமணி முதல் விசேஷ அபிஷேகமும் தீபாராதனையும் விபூதி பிரசாதமும் வழங்கப்படும். மாலை ஆறுமணி தொடக்கம் மூலமூர்த்தி பூசையும் அதைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் நியாச பூர்வமாக பூசையும் விசேஷ தீபாராதனையும் நடைபெறும். பதினொராவது நாள் திருவடிநிலையில் தீர்த்தம் நடைபெறும்.

## மீனவருக்கு தொல்லை

காங்கேசன்துறை, சனி

அடையாளஅட்டை இல்லாதவர்கள் கைது செய்யப்படுகின்றனர். மயிலிட்டி மீனவர்கள் மன்னாரில் மீன் பிடிப்பதற்காகச் சென்ற சமயத்தில் அங்கு வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனராம். இவ்வாறு நிகழ்ந்ததையடுத்து மன்னாரிலிருந்த மயிலிட்டி மீனவர்கள் விரைந்து வந்து கிராமசேவையாளர், காரியாதிகாரியின் கடிதத்துடன் சென்றனர்.

நெடுந்தீவிலிருந்து தொழிலுக்காகச் சென்ற மயிலிட்டி மீனவர்களுக்கும் இராணுவச் சிப்பாய்கள் தொல்லை கொடுத்தனராம்.

ஆண்டின் வருமானத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சராசரியாக 45 சத விகிதம் அதிகரித்துள்ளது எனக்கூறலாம். 1969-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை ஆக்கி இச்சபையின் சார்பில் முன்னைய ஆணையாளர் அங்கீகரித்துள்ளார். அவ்வரவு செலவுத்திட்டத்தின் அடிப்படையிலேயே இவ்வருட வரி அறவிடப்பட வேண்டும். இவ்வாறு அறவிடப்படும்போது சராசரியாக ஏறக்குறைய 40 முதல் 50 விகிதம் வரை அதிகரிக்கும் எனக்கூறலாம்.

இக்காரணத்துக்காகவே மதிப்பீடுசெய்த மதிப்பீட்டு இலாகாவினருக்குக் கொடுக்கப்படவேண்டிய 26 ஆயிரத்து 764 ரூபா 63 சதத்தை கொடுக்க நாம் ஆட்சேபித்தோம்.


இதுபொதுமக்களை அதிகம் பாதிக்கும் எனவும் நாம் கருதுகின்றோம்.


அன்னையின் ஆணை

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்

MANOHARA
JAFFNA
Daily at 4-45,
7-00, & 9-45 p. m.
Pre Poya-Poya 10-30 a. m.
Raquel Welch
in
ONE MILLION YEARS B. C.
(Col r)
Owing to limited Engagements advance Bookings for Balcony, Reserve and 1st Class are available.

கிங்ஸ்லி



பிளாஸா
வெம்பிளி
(கண்டி)
ஸ்ரீகிருஷ்ணா
(திருமலை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
மற்றும்
சினிமாஸ்திரைகளில்

சிவாஜி கணேசன்
கே.ஆர். விஜயா
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ், குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின் மகோன்னத
ஈஸ்ட்மென்
கலர்ப் படைப்பு



ஊட்டிவரை உறவு
இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கவிஞர்கண்ணதாசன்

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்
S S. வாசன்
அவர்களால்
ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற
இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விவேகமான முடிவு": அயூப்கானுக்கு பாகிஸ்தான் அரசியல்தலைவர்கள் பாராட்டு

ராவல்பிண்டி, பெப். 22

**அடுத்த அதிபர் தேர்தலில் தாம் ஒரு வேட்பாளராக நிற்கப்போவதில்லையென்று பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் அறிவித்திருப்பதை பாகிஸ்தானிலுள்ள எல்லாப்பிரிவினரும் வரவேற்றுள்ளனர்.**

**அயூப்கானின் நேரடி அரசியல் எதிரிகளான, சுல்பிகார்அலி பூட்டோ, எயார்மார்ஷல் அஸ்வர்கான், லெப்டினன்ட் ஜெனரல் அஸம்கான் முதலிய பலரும் அவரது இந்த நடவடிக்கையை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.**

இது ஒரு விவேகமான நடவடிக்கையென்று எயர்மார்ஷல் அஸ்ஹர்கான் கருத்து வெளியிட்டிருக்கிறார்.


எட்டு எதிர்க்கட்சிகளின் ஜனநாயக செயல் கமிட்டி அயூப்கானின் இந்த முடிவு மிகச்சிறந்த மேலான நடவடிக்கை என்று பாராட்டியுள்ளது. அயூப்கானின்இந்த நடவடிக்கையை தேசம் வெகுவாகப் பாராட்டுகிறது என்று திரு. ஆஸம்கான் தெரிவித்துள்ளார்.

### மறக்க முடியாத தீர்மானம்

நேற்று மாலை அதிபர் அயூப்கான் வானொலியில் நிகழ்த்திய ஒரு உரையின்போது அடுத்த அதிபர் தேர்தலில் தாம் ஒரு வேட்பாளராக நிற்கப்போவதில்லையென்று எதிர்பாராதவிதமாக அறிவித்தார்.

அரசியல்திட்டத்தில் மாற்றம் செய்வதுபற்றி ஆலோசனை நடத்துவதற்கு வரும்படி எதிர்க்கட்சியினரை அவர் மீண்டும் கேட்டுக்கொண்டார்.

அதிகார மாற்றத்துக்கான ஏற்பாடுகள் பற்றியும், மக்கள் விருப்பப்படி ஆட்சி அமைவதற்கான தேர்தல் இடம்பெறுவது பற்றியும் ஆலோசனை நடத்தவேண்டும் என்று அவர் தெரிவித்தார். இந்த ஆலோசனைகளில் இணக்கம் ஏற்படாது போனால் தாமே ஒரு திட்டத்தை உருவாக்கி தேசிய சட்டசபையின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கவேண்டியிருக்குமென்றும் அயூப்கான் கூறினர்.



## 8 பேர் பலியாகினர் 30 பேருக்கு காயம்

கராச்சி, பெப். 22

கிழக்குப் பாகிஸ்தானில் நேற்று ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் ஏற்பட்ட சண்டையில் குறைந்தது எட்டுப்பேர் பலியானார்கள். 30 பேர் காயமுற்றனர்.

பாகிஸ்தானில் பல இடங்களிலும் நேற்று தியாகிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதையொட்டி பல இடங்களிலும் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக் காரர்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டன. சிட்டாகாங்கில் தியாகிகளின் சமாதிகளில் மலர்வளையங்களை வைத்து மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். டாக்காவில் தியாகிகளுக்காகப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன. குல்னா என்ற இடத்தில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம்செய்ததில் 8 பேர் மரணமானார்கள் 30 பேர் காயமடைந்தார்கள்.

டாக்காவில் மத்திய கல்வி அமைச்சரின் வீட்டுக்குத் தீ மூட்டப்பட்டது. மாகாண கல்வி அமைச்சர் வீட்டுக்கும் தீவைக்கப்பட்டது. கிழக்குப் பாகிஸ்தானில் ஒரு குழப்பத்தில் ஒரு மாணவர் கொல்லப்பட்டார் ஓர் இடத்தில் ஒரு அதிகாரியை மக்கள் பிடித்து நசுக்கி கொன்றார்கள். அவர் மக்கள் கும்பலை நோக்கி முதலில் சுட்டார் அதில் சிலர் காயமடைந்தார்கள். பின்னர் அவர்மீது பாய்ந்து மடக்கிக்கொன்று விட்டார்கள்.

## வேல்ஸ் இளவரசர் க

## மே. வங்க அரசு

கல்கத்தா, பெப். 22

மேற்கு வங்காளத்தில் புதிய அமைச்சர் அவை அடுத்த செல்வாய்க்கிழமை பதவிஏற்குமென்று கூட்டுமுறையின் சட்டசபைக் கட்சித்தலைவர் திரு. அஜாய் முகர்ஜி அறிவித்துள்ளார். தமது அமைச்சர் அவையில் 25அமைச்சர்களும், ஸ்டேட் மந்திரிகளும் இருப்பார்களென்றும் இது இன்னும்அதிகரிக்கலாமென்றும் அவர் தெரிவித்தார்.

## பீகார் மந்திரிசபை

பட்னா, பெப். 22

பீகாரில் புதிய அமைச்சர் அவை இன்னும் நான்கு நாட்களில் பதவி ஏற்கும் என்று காங்கிரஸ் கட்சியின் சட்டசபைத்தலைவர் திரு. ஹரிஹரிசில் அறிவித்துள்ளார்

## சர்வதேச சமுத்திர ஆராய்ச்சி மகாநாடு

லண்டன், பெப் 22

# யாழ். நூல்நிலையத்தில் அமெரிக்கப்பகுதி

### எதிர்காலம் பற்றி நூல்நிலையக்குழு தீர்மானிக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''யாழ்ப்பாண மாநகர சபையில் நிர்வகிக்கப்பட்டு வரும் பொதுஜன நூல்நிலையத்தின் ஒருபகுதி அமெரிக்க நூல்களைக் கொண்ட தனிப் பகுதியாக இருப்பது இங்குள்ள மக்களுக்கு தப்பான அபிப்பிராயத்தைக் கொடுத்து வருகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொள்கைகளையும், லட்சியங்களையும் பரப்பும் ஒரு கருவியாக இது இருந்து வருவது கண்டிக்கத்தக்கதாகும். எனவே இந்த அமெரிக்க நூலகப் பகுதி நூல்களை உடனடியாக மற்றைய நூல்விநியோகப் பகுதியுடன் சேர்க்க வேண்டும்.''

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபையின்மாதாந்தக் கூட்டத்தில், நூல் நிலைய அமெரிக்க பகுதி மீதான முன்னறிவிப்புப் பிரேரணை விவாதத்தின்போது பேசிய சபை அங்கத்தவரான திரு. அ. விசுவநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கம் ஒரு நடுநிலை நாடாக விளங்குவதன் காரணமாக, யாழ். மாநகரசபையின் கீழ் இயங்கும் நூல்நிலையத்தில் அமெரிக்கன் பகுதி என ஓர் பகுதியிருப்பதனால் மற்றும்பல் வேறு வல்லரசுநாடுகளுக்கும் இத்தகைய சலுகையைக் கொடுக்க வேண்டுமாதலால் அமெரிக்கன் பகுதியிலுள்ள நூல்களை எமது உடன் உதவும் நூல் பகுதியுடன் சேர்த்து அங்கத்தவர்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்ற பிரேரணையை திரு. விசுவநாதன் பிரேரித்ததைத் தொடர்ந்தே இதன் மீதா[illegible] விவாதம் ஆரம்பமா[illegible]. இப்பிரேரணையை திரு. என் மார்க்கண்டு ஆமோதித்தார்.

இச்சமயத்தில் [illegible] வர் [illegible] கம் [illegible]மரிக்கன் பகுதியைப் போல நூல்நிலையத்தில் மிகுதி நாடுகளை ஒதுக்குவது நடுநிலைமைக்கொள்கைக்கு புறம்பானது. இதனாலேயே நான் இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்தேன்.

நகரமுதல்வர் திரு. நாகராஜா இதற்குப் பதிலளித்துப் பேசியதாவது:

தனிப்பட்ட அமெரிக்கன் பகுதியை தவிர்க்கவேண்டியது அவசியம்தான். பிரச்சாரம் செய்யும் கருவியாக இது இருக்குமானால் இது ஒழிக்கப்படவேண்டியது அவசியமே உதவாத புத்தகங்கள் இங்குஇருந்தால் அவைகளை உடனே அகற்றவேண்டும். (அப்படியென்றால் கழிக்கும் புத்தகங்களை புலோப்பளை நூல் நிலையத்துக்குத் தாருங்கள்என திரு. ஏ. ஜி. ராஜசூரியர் கேட்டார்) இதுபற்றி தீர்க்கமாக ஆராயவேண்டும்.

இறுதியில் இதனை தீர்மானிக்கும் பொறுப்பை நூல் நிலையக் குழுவிடம் ஒப்படைப்பதென முடிவு செய்யப்பட்டது. நூல் நிலைய புதிய குழுவுக்கு அங்கத்தவர்களைத் தெரிவதற்கு ஒவ்வொரு அங்கத்தவரும் ஒவ்வொரு பெயரைத்தரவேண்டும் என்றும் முதல்வர் அங்கத்தவர்களிடம் கேட்டுக்கொண்டார். (கா. நி.)

## நஷ்டஈடு வழங்க உத்தரவு

குரும்பசிட்டி, சனி

கிராமசபைத் தேர்தலையடித்து இடம்பெற்றகோஷ்டி கைகலப்பில் மயிலிட்டி முலவையைச் சேர்ந்த மஞ்ஞேன்மணி என்ற பெண்[illegible]யின் வீட்டுக்குத் தீவை[illegible] நாசப்படுத்தியதாக, பூதன், மாணிக்கன், வல்லி, காசி ஆகிய நால்வருக்கு எதிராக காங்கேசன்துறை[illegible] பொலிசார் குற்றஞ்[illegible]டியுள்ள வழக்கு மல்லா

## தொட்டில் பழக்கம்

குரும்பசிட்டி, சனி

திருட்டு வழக்கில் குற்றப்பட்டு அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவன் ஒருவன் பாடசாலையிலிருந்து களவாக தப்பி ஓடிச்சென்று மீண்டும் திருட்டுத்தொழிலில் ஈடுபட்டதாக ஊரவர்களால் பொலிஸில் கையளிக்கப்பட்டான். தற்போது இச்சிறுவன் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளான்.

மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கடையில் பணம் களவாடியதாக செல்லையா சந்திரசேகரன் என்ற வாலிபர் மீது சுன்னாகம் பொலிஸார் தொடர்ந்திருந்த வழக்கில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் ரூபா 500 பிணையில் மல்லாகம் நீதிபதி திரு.எம். சண்முகலிங்கம் அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் அனுமதித்திருந்தார். ஆனால் பாடசாலையை விட்டு களவாக தப்பி ஓடிய இச்சிறுவன் நீலியம்பனை பிள்ளையார் ஆலயத்தில் திருட முயன்றதாக பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு விளக்கமறியலில் தற்போது இருக்கின்றான்.

## வீட்டுக்கு தீ வைத்தாராம்

குரும்பசிட்டி, சனி

குடும்பத் தகராறு காரணமாக தனது மனைவியை விட்டுப் பிரிந்து வாழும் வாலிபர் ஒருவர் வீட்டுக்கு நெருப்பு வைத்து சேதப்படுத்தியதாக அவரது மாமனார் செய்த புகாரையடுத்து பொலிசாரால்கைதுசெய்யப்பட்டார். மருமகன் வியாழக்கிழமை நடைபெற்ற இச்சம்பவம்குறித்து குப்ளான் வாசியான முத்துவேலு தம்பிப்பிள்ளை சுன்னாகம் பொலிஸில் செய்த முறையீட்டினால் எஸ். அருணாசலம் என்ற வாலிபரே கைதான நபராகும். மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் இந்நபர் பொலிஸாரால் ஆஜர்செய்யப்பட்ட போது ரூபா 500 பிணை செலுத்தி செல்ல அனுமதித்துமீண்டும் அடுத்த மாதம் 5-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

## பிரிவுபசாரம

ஊர்காவற்றுறை. சனி

# அண்ணாநினைவு மண்டபம்

## பாஷையூர் மக்கள் முயற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

அமரர் அண்ணாவின்பெயரில் நினைவு மண்டபம் ஒன்றை நிறுவ பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தினர் முன்வந்துள்ளார்கள். இதற்கான அடிக்கல்நாட்டு வைபவமும் இம்மாதம் பிற்பகுதியில் நடைபெறவிருக்கின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற சங்கத்தின்பொதுச் சபைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

சுவாமி ஞானப்பிரகாசருக்கு சிலையும், அண்ணா பெயரில் நினைவு மண்டபமும் அமைப்பதென இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டு அண்ணா நினைவு மண்டபத்தையே முதலில் அமைப்பதென இங்குஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

நிலையத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்கள்: திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எம்.பி திரு. ஏ. போல்ராஜ், திரு. ஏ. செபஸ்தியாம்பிள்ளை, தலைவர்: திரு.ஆர். இமானுவல், செயலாளர்: திரு,செ. ஞானதாஸ். பொருளாளர்: திரு. செ. றெக், 10 பேர் கொண்ட திட்ட ஆலோசனைக் குழு ஒன்றும் தெரியப்பட்டது, (கா,நி)

## ஊறணியில் அஞ்சலி

அளவெட்டி, ஞாயிறு

அமரரான அறிஞர் அண்ணாவுக்கு அஞ்சலிகூட்டமொன்று இன்றுஊறணியில் நடைபெறவிருக்கிறது,

மயிலிட்டி ஊறணி தமிழரசு வாலிபமுன்னணிக் கிளையின்சார்பில் ஊறணி புனித அந்தோனியார் சனசமூக நிலைய முன்றலில் வண பிதா. பி. எஸ். மரியதாசன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

திரு. எஸ்.ஜே. வி,செல்வநாயகம் எம். பீ. திரு. க. துரைரத்தினம் எம். பீ., திரு. வ. ந. நவரத்தினம் எம், பீ. ஆகியோர் உட்பட இக்கூட்டத்தில் மற்றும் பலர் உரையாற்றுவர்.

## பட்டினசபை அனுதாபம்

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

அறிஞர் அண்ணாதுரையின் மறைவுக்காக இரண்டு நிமிடநேர மௌனம் அனுஷ்டித்த உரும்பராய் ஊரெழு பட்டினசபை, ''அண்ணாவின் மறைவினால் துயருறும் குடும்பத்தாருக்கும் தமிழ் நாட்டு மக்களுக்கும் இச்சபையின் ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவிக்க வேண்டும்'' என்று திரு. அ. காராளசிங்கம் கொண்டு வந்த பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

## அனுதாபக் கூட்டம்

## அண்ணாபெயரில் ச. ச. நிலையம்

மண்டைதீவு, சனி

மண்டைதீவு சனசமூக நிலைய வருடாந்தப்பொதுக் கூட்டத்தில் மேற்படி சனசமூக நிலையத்தின் பெயரை அமரர் அறிஞர் அண்ணாவின் நினைவாக அண்ணா சனசமூகநிலையம் என மாற்றுவதென் ஏகமனதாக தீர்மாணம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் இ. நா. இராசலிங்கம். உபதலைவர் ஏ திரு ஞானபாலன். செயலாளர் இ. படிகலிங்கம். உபசெயலாளர் ப. லோகேஸ்வரன். பொருளாளர் கை. சற்குணலிங்கம். காவலர் நா. சிவசுப்பிரமணியம். 6 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம் ,ஞாயிறு

18 வயதுக்கு மேற்பட்ட தொழில்நுட்ப மாணவர்களுக்கு சீசன் டிக்கெட் மறுக்கப்பட்டதேன். அரசாங்க பாடசாலைகளிலும், பல்கலைக்கழக புகுமுக வகுப்புகளிலும்கல்வி பயிலும்18 வயதுக்கு மேற்பட்டோருக்கு சீசன் டிக்கெட் வழங்கப் பட்டுவரும்போது எமக்கு மட்டும் ஏன் வழங்கப்படாமலுள்ளது.''

இவ்வாறு ஒரு மகஜரை யாழ். கனிஷ்ட தொழில் நுட்ப மாணவமன்றத் தலைவர் திரு. சி. இலச்சுமிகாந்தன் யாழ். இ. போ. ச. முகாமையாளருக்கும், போக்குவரத்து விளையாட்டு அமைச்சர் திரு. வி.ஏ.சுகத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேர்வளையங்களை வைத்து மக்கள் அஞ்சலி செலுத்தினுர்கள். டாக்காவில் தியாகிகளுக்காகப் பிரார்த்தனைகள்

அதில் சிலர் காயமடைந்தார்கள். பின்னர் அவர்மீது பாய்ந்து மடக்கிக்கொன்றுவிட்டார்கள்.

## வேல்ஸ் இளவரசராக சாள்ஸ் பதவியேற்பார்

லண்டன், பெப் 22

பிரிட்டிஷ் சிம்மாசனத்தின் வாரிசான இளவரசர் சாள்ஸ் ஜூலைமாதம் 1ந்திகதி வேல்ஸ் இளவரசராக சம்பிரதாய சடங்குகளுடன் பதவியில் அமர்த்தப்படுவார். மிகக் கோலாகலமான காட்சியாக இடம்பெறவிருக்கும் இந்தப் பாரம்பரிய அரச வைபவத்தை பிரிட்டனிலும் உலகடங்கிலுமிருந்தும் 50 கோடி மக்கள்வரை டெலிவிஷன் மூலம் கண்டு களிக்கவிருக்கிருர்கள்.

வேல்ஸிலுள்ள சரித்திரப் பிரசித்தி வாய்ந்த கர்ணுவன் கோட்டையில் நிகழும் இவ் வைபவத்தின் போது எலிசபெத் மகாராணியார் தமது மூத்த புதல்வனுக்கு வேல்ஸ் இளவரசருக்கான விருதுச் சின்னத்தை வழங்குவார்

கண்கொள்ளாக் காட்சியாக விளங்கவிருக்கும் இந்த அரச விழாவில் கண்கவர் குதிரைப்படை அணிவகுப்புகளும், தேசிய கீத வாத்தியங்களும் இடம்பெறும், அரச குடும்பத்தினர், பிரபுக்கள், மக்கள் சபைப் பிரதிநிதிகள், மற்றும் முக்கியஸ்தர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்வார்கள்.

## சர்வதேச சமுத்திர ஆராய்ச்சி மகாநாடு

லண்டன், பெப் 22

முதன்முறையாக சர்வதேச சமுத்திர ஆராய்ச்சி மகாநாடு ஒன்று தென் இங்கிலாந்திலுள்ள பிரைட்டன் நகரில் ஆரம்பமாகியது. 25 நாடுகளைச் சேர்ந்த 1500 பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் பங்குபற்றி வருகிருர்கள். இம்மகாநாடு நான்கு தினங்கள் வரை நடைபெறும்.

மதா... விவாதம் ஆரம்பமான... இப்பிரேரணையை திரு. என் மார்க்கண்டு ஆமோதித்தார்.

இச்சமயத்தில் துணைமுதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் ...மரிக்கன் பகுதியைப் போல நூல்நிலையத்தில் ரஷ்யன் பகுதி, ஜேர்மன் பகுதி எனவும் அமைக்கலாமெனக் கருத்துத்தெரிவித்தார். திரு. விசுவநாதன் மேலும் பேசியதாவது:-

ரஷ்ய அரசாங்கமும், சீன அரசாங்கமும் இங்கு அன்பளிப்பாகக் கொடுத்த ஆயிரக்கணக்கான நூல்களும் கீழ் மாடியில் எவரது கண்ணுக்கும் எட்டாதவகையில் அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் அமெரிக்கனுக்கு தனிமதிப்புக் கொடுத்து, மற்றைய பகுதி

...யின் வீட்டுக்குத் தீவை...து நாசப்படுத்தியதாக, பூதன், மாணிக்கன், வல்லி, காசி ஆகிய நால்வருக்கு எதிராக காங்கேசன்துறைப் பொலிசார் குற்றஞ்...டியுள்ள வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம், சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்போது 4ம் எதிரி குற்றச்சாட்டை- ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரிகள் நால்வரையும் ரூபா 120 நஷ்டஈடு வழக்காளிக்கு வழங்க உத்தரவிட்டு நாலாம் எதிரியின் கைவிரல் அடையாளம் பதிவுசெய்ய உத்தரவிட்டு மீண்டும் கோர்ட்டில் ஆஜராகும்படியும் கட்டளையிட்டார். வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் வழக்கை பொலிஸ் தரப்பில் நடாத்திஞர்.

நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

### பிரிவுபசாரம

ஊர்காவற்றுறை. சனி

புங்குடுதீவு தபால் நிலையத்தில் உதவித் தபால் அதிகாரியாகக் கடமையாற்றி கொழும்பு மத்திய தபால் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்ற திரு. வி. பொன்னுத்துரைக்கு புங்குடுதீவு தபால் நிலைய ஊழியரும் அதிபரும் உபசரணைவிருந்தளித்தனர்.

...வந்த பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

### அனுதாபக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அண்ணுமலை இசைத்தமிழ் மன்றச் செயலாளராகவும், அகில இலங்கை இசை ஆசிரியர் சங்கத் தலைவராகவும் கடமையாற்றி அகால மரணமடைந்த சங்கீத பூஷணம் திரு. ஆ. நமசிவாயத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும்கூட்டமொன்று நாளை காலை 9 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெறவிருக்கின்றது.

(கா. நி.

யாழ். கனிஷ்ட தொழில்நுட்ப மாணவமன்றத் தலைவர் திரு. சி. இலச்சுமிகாந்தன் யாழ். இ. போ. ச. முகாமையாளருக்கும், போக்குவரத்து விளையாட்டு அமைச்சர் திரு. வி.ஏ.சுகததாசாவுக்கும், நல்லூர் எம். பி. திரு. ஈ. எம். வி. நாகநாதனுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அந்த மகஜரில் இந்தசீசன் டிக்கெட் மறுப்பினுல் மேற்படி நிலையத்தில் கல்வி பயிலும் மாணவர் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிருர்கள் என்றும், அடுத்தமாத ஆரம்பத்தில் சீசன்டிக்கட் வழங்கும்படியும் கோரியுள்ளார்.

(ந. நி.)

நாகாலந்தின் புதிய அமைச்சரவை

## தலை கொய்யும் இனத்தின் தலைவர் முதலமைச்சர்

கொஹிமா, பெப். 22

நாகாலாந்தின்புதிய அமைச்சர் அவை இன்று பதவி ஏற்றுக்கொண்டது. திரு ஹொகிஷேசீமாவை முதலமைச்சராகக்கொண்ட இந்த அமைச்சரவையில் 16 அமைச்சர்கள் அங்கம்வகிக்கிருர்கள். கலைக்கப்பட்ட நாகாலாந்து அமைச்சர் அவையில் திரு. ஹொகிஷேசீமாநிதி அமைச்சராக இருந்தார், நாகாலாந்து சட்டசபைக்கு புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட நாகாலாந்துதேசிய இயக்க சட்டசபைக் குழுவின தலைவராக அவர் அண்மையில் தெரிவுசெய்யப்பட்டார். தலைமைப்பதவிக்கான போட்டியிலிருந்து முந்திய முதலமைச்சர் திரு. ரி. என். அங்காமியும் மற்றவர்களும் விலகிக் கொண்டதால் திரு. ஹொகிஷேசீமா ஒருமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

நாகாலாந்தின் முதலாவது முதலமைச்சராக திரு. ஷிலு ஆவோவும் அவருக்குப்பிறகு திரு. அங்காமியும் இருந்துள்ளனர். இந்தமுறைதிரு. ஹொகிஷிமா முதலமைச்சராவதின் மூலம் நாகாலாந்தின் மூன்ருவது பெரிய இனத்தின் கையில் அப்பதவி ஒப்படைக்கப்படுகின்றது. அஓஸ் இனத்திற்கு அடுத்தாற்போல் சீமாஸ் இனமே மிகப் பெரிய இனம். நாகாலர்ந்திலுள்ள எல்லா இனங்களிலும் சீமாஸ் என்ற இனமே சண்டைபோடும் பெரிய இனமாகும். இந்த இனத்தவர்கள் துணிச்சலுக்கும்மனிதத்தலைகளைக்கொய்வதற்கும்பேர்போனவர்கள். தலைமறைவு நாகாக்களுக்கு திரு. ஹொகிஷேசீமா ஒரு எதிரியாகவே இருந்துவந்துள்ளார். பலதடவைகள் தலைமறைவு நாகாக்களின் தாக்குதலுக்கு இலக்காகி தனியேநின்றுபோராடித்தப்பியிருக்கிருர். இவர் ஆரம்பத்தில் மொகச்சுங் என்ற கிராமத்தில் கல்விபயின்று பின்னர் ஷிலாங்கிலுள்ள செண். அந்தனிஸ் கல்லூரியில பட்டம்பெற்ருர். சேமாவோதா இனங்களுக்கான பாடசாலைகளின் உதவி இன்ஸ்பெக்டராக முதலில் பதவிவகித்தஇவர்அரசாங்க பதவிகளைதுறந்துஅரசியலில் குதித்தார். 1964-ல் அவர் முதலாவது நிதிமந்திரியாஞர். திரு. அங்காமி அரசாங்கத்திலும் அதே பதவிவகித்தார். இவருடைய மந்திரிசபையில் முன்னுள் முதல்வர் திரு. அங்காமியும்ஒருஅமைச்சராகசேர்க்கப்பட்டுள்ளார்.

கெய்ரோ, பெப். 22

மேற்காசிய நாடுகளுடன் நேரடியாக ஆலோசனைகள் நடத்துவதற்காக மேற்காசியாவுக்கான ஐ. நா. அதிகாரி திரு. ஜாரிங் மீண்டும் மேற்காசியாவுக்கு வந்துள்ளார்.


நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும் அறவே ஒழிக்க உபயோகியுங்கள்

'என்றெக்ஸ்' 20

என்றின் என்னும் பொருளின் வலுமிக்க உருவம்




நெற் பீடைக் கிருமிகள் எத்தனையோ. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகையான, விலையுயர்ந்த கிருமிநாசினிகள் சிபார்சு செய்யப்படுகின்றன. ஆஞல் நெற் பயிரைத் தாக்கும் எல்லா வகைக் கிருமிப் பீடைகளையும் சிக்கனமாக அறவே அழிக்க வல்லதென்று நிரூபிக்கப்பட்ட கிருமிநாசினி ஒன்றுதான் உண்டு. இத்தகைய சஞ்சீவி மருந்தே 'என்றெக்ஸ்' 20. இது நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும் போகத்துக்குப் போகம், வருடத்துக்கு வருடம் வெகு செம்மையாகக் கட்டுப்படுத்த வல்ல கிருமிநாசினியெனப் பயிர்ச் செய்கையாளர்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளார்கள். சேற்று நில நெற்காணிகளிலும் மேட்டு நிலக் காணிகளிலும் இலங்கையிலும் நெல் விளையும் உலகின் எல்லாப் பாகங்களிலும் இவ்வாறு நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் நெற்பயிரை எல்லா வகையான கிருமிப் பீடைகளிடமிருந்தும் காப்பாற்றுவதற்கு பயிர் 10-14 நாள் வளர்ச்சியடைந்திருக்கும் பருவத்தில் நன்ருக 'என்றெக்ஸ்' 20 தெளிக்கத் தொடங்குங்கள். பின்னர் மாதம் ஒரு முறை தெளித்து வரவும். 2 கலன் நீருக்கு 1 திரவ அவுன்ஸ் 'என்றெக்ஸ்' 20 வீதம் கலந்த 32-40 கலன் தெளி திரவத்தை ஓர் ஏக்கருக்குத் தெளிக்கவும். இதற்காகும் செலவு, உபயோகிக்கும் அளவுப் பிரமாணத்தையும் கொள்வனவு செய்யும் அளவையும் பொறுத்து, ஏக்கருக்கு ஒரு முறைக்கு ரூ. 6/- முதல் ரூ. 10/- வரை அமையும். பீடைகளின் தொல்லையற்ற ஆரோக்கியமான பயிரும் அமோக விளைச்சலும் கிடைப்பதற்கு இது அற்ப செலவே.

'என்றெக்ஸ்' 20 முத்திரிக்கையிட்ட, கலப்படஞ் செய்ய இடமளிக்காத 16 திரவ அவுன்ஸ் போத்தல்களிலும் 1, 4, 45 கலன் கலங்களிலும் கிடைக்கும்.

ஷெல் ரசாயனப் பொருட்கள்

SHELL


### வயோதிபர் விடுதலை

குரும்பசிட்டி, சனி

கீரிமலையில் சிவராத்திரி தினத்தன்று சந்தேகத்திற்கு இடமாக வீதியில் நிற்கக்காணப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த நல்லூரைச் சேர்ந்த ஏ. பெரியதம்பி என்ற வயோதிபரை காங்கேசன்துறைப் பொலிஸாரின் விண்ணப்பத்தின் பேரில் மல்லாகம் மாஜிஸ்திரேட் விடுதலை செய்தார்.

### பாராட்டுவர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இளைப்பாறிய மலாயா தபால் அதிபர் திரு. சி. குழந்தைவேலு சமாதான நீதவாஞக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையத்தார் இம்மாதம் 25-ம் திகதி பாராட்டுவிழா ஒன்று நடத்தவிருக்கின்றனர்.

### சமாஜக் கூட்டம்

குரும்பசிட்டி, சனி

வலிகாமம் வடக்கு சனசமூக நிலையங்களின் சமாஜப் பொதுச்சபைக் கூட்டம்இம்மாதம் 24ம் திகதி காங்கேசன்துறை பட்டின சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. கலை விழா நடாத்துவது பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.


எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை!
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்

AGENTS

றேயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எந்த வ: தினராக இருப்பினும், எப்படி வளர்ந்தவர்களாக இருப்பினும் எல்லோருக்கும் அறநெறிப் பயிற்சி வழங்கலாம். — மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 12-ந் திகதி
(23 - 2 - 69)

## அயூப்பின் தீர்மானம்

அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் பாகிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என்று கடந்த பத்தாண்டு காலமாக பாகிஸ்தான் ஜனாதிபதியாகப் பதவி வகித்து வரும் பீல்ட் மார்சல் அயூப்கான் அறிவித்திருக்கிறார். ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் போட்டியிடுவதில்லையென்ற தமது முடிவு இறுதியானதென்றும் இதில் மாற்றம் ஏற்படமாட்டாதென்றும் அயூப்கான் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

இதை விவேகமான முடிவு என்று பாகிஸ்தானின் அரசியல் தலைவர்கள் பாராட்டி வரவேற்றுள்ளனர். கடந்த சில தினங்களாக அதிகரித்து வந்த கிளர்ச்சிகளும், வன்முறைச் செயல்களும் இனி முற்றுப்பெறுமென எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் போட்டியிடுவதில்லையென்ற தமது தீர்மானத்தை அயூப்கான் அறிவித்த பின்னரும் பாகிஸ்தானில் சில பகுதிகளில் வன்முறைச் செயல்களும் பொலிஸ் துப்பாக்கிச் சம்பவங்களும் தீ வைப்பு போன்ற அழிவுகளும் நிகழ்ந்திருக்கின்றன. இன்னும் ஓராண்டு காலத்திற்குக்கூட அதிபர் பதவியில் அயூப் இருக்கக் கூடாதென்றும் உடனடியாகவே அவர் பதவியிலிருந்து விலகிவிட வேண்டுமென்பதும் கிளர்ச்சி செய்வோரின் விருப்பமாக இருக்கலாம்.

பதவிப் பூசல், அதிகாரப் போட்டி காரணமாக அரசியல் ஸ்திரமின்மையும் நிலவி நாடு பின்தங்கியிருந்த சமயத்தில் ஆட்சிக்கு வந்த அயூப்கான் சர்வாதிகாரமாக நடந்து கொண்ட போதிலும் நாட்டில் ஸ்திரமான ஆட்சியை நிலைநாட்டியதுடன் நாட்டையும் பல துறைகளிலும் முன்னேற்றியுள்ளார். அமெரிக்காவின் நட்பை மட்டும் நம்பியிருந்த பாகிஸ்தான் இன்று நவசீனா, சோவியத் ரஷ்யா ஆகிய கம்யூனிஸ்ட் நாடுகளுடனும் நட்புறவு கொண்டு அவைகளின் உதவியையும் பெற்று வருவது அயூப்பின் ராஜதந்திரத்திற்கு தக்க சான்று. அயூபின் ஆட்சிக்கு முன்னரே பாகிஸ்தானும் இந்தியாவும் பகைமை கொண்டிருந்தது டன் அயூப்பின் ஆட்சியில் பெரிய யுத்தமாக வெடித்த போதிலும் தாஷ்கண்ட் பிரகடனத்தை ஏற்று அதில் கைச்சாத்திட்டு இரு நாடுகளுக்குமிடையிலுள்ள பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண ஒப்புக் கொண்டது அயூபின் சமாதான ஆர்வத்திற்கு எடுத்துக்காட்டு.

தமது ஆட்சிமீது மக்கள் சலிப்படைந்து விட்டார்களென்பதை அயூப் உணர்ந்து மீண்டும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதில்லையென்று அவர் செய்துள்ள முடிவைப் பாராட்ட வேண்டும். ஜனநாயக அரசியல் அமைப்பை உருவாக்கவும் சரியான ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெறவும் அயூப் சம்மதம் தெரிவித்திருக்கிறார். நாடு நெருக்கடியான நிலையிலிருக்கிறதென்றும் பேரழிவைத் தடுப்பதற்கு சகலரும் முன்வரவேண்டுமென்றும் அயூப் வேண்டுகோள் விடுத்திருப்பதுடன் எதிர்க் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு தடையாக இருந்த அவசரகால நிலை, தலைவர்களின் தடுப்புக்காவல், டாக்கா சதிவழக்கு ஆகியவைகளை நீக்கியிருப்பது அயூபின் நாட்டுப்பற்றுக்கு ஓர் உதாரணம்.

அயூப்கானுக்குப்பின் யார் பதவிக்கு வந்தாலும் அயூபின் நல்ல பணிகளைத் தொடர்ந்து செய்வதுடன் அயல் நாடான இந்தியாவுடன் சமாதானமாக வாழ்வதில்தான் பாகிஸ்தானின் முன்னேற்றமும் இந்திய உபகண்டத்தின் அபிவிருத்தியும் ஆசியாவின் அமைதியும் பெரிதும் தங்கியிருக்கிறது.

இன்று அமரர் திரு. க. நவரத்தினம் நினைவுதினம்

# கலைப்புலவரின் புனிதவாழ்வுக்கு அவர் தம் நூல்களே சான்று

## தாம்பெற்ற இன்பம் பிறரும்பெறுதற்கு ஆசைப்பட்டார்

தென்னிந்தியாவில் சென்ற நூற்றாண்டில் தமிழாசிரியர்களைத் தமிழ்ப்பண்டிதர்கள் என்று கூறுவார்கள். அவர்களுக்கு ஊதியமும் குறைவு. மதிப்பும் குறைவு. மேல் குறிப்பிடப்பட்ட பண்டிதர்களைத்தவிர பெரும்பான்மையான தமிழாசிரியர்கள் தாழ்ந்த மனப்பான்மையும், குறைந்த ஆற்றலும்பெற்றவர்களாக இருந்தார்கள். ஆகவே எவ்வாறு மதிப்பிருக்கும்? புதிதாக நூல்களை இயற்றுவதற்கும் வல்லமையற்றவர்களாக இருந்தார்கள். தாங்கள் படித்ததை வெளியிடுவதைத்தவிர புதிதாகச் சில கருத்துக்களை உருவாக்கவும் எழுதவும் வெளியிடவும் முடியாதவர்களாக இருந்தார்கள். ஆனால் ஈழநாட்டிலோ அவ்வாறல்ல. தமிழாசிரியர்கள் புதிதாக நூல்களை எழுதவல்லவர்கள், வெளி

### வாழ்வும் தொண்டும்

யிடவும்வல்லவர்கள். ஆகவே அவர்களைப் பொதுமக்கள் மிக மதிப்போடு பாராட்டுவார்கள். அவர்களில் சிறந்தவர்கள் ஆறுமுகநாவலர், தாமோதரம்பிள்ளை, அம்பலவாண நாவலர், கதிரவேற்பிள்ளை, வேலுப்பிள்ளை, பொன்னம்பலப்பிள்ளை முதலானோர். இவர்கள் ஈழநாட்டுப் பெருமையை தென் இந்தியாவிற்குக் கொண்டு சென்று தமிழ் வளத்தைப் பரப்பினார்கள். தமிழாசிரியர்களை விடுத்து மற்ற ஆசியர்களும் தென்னிந்தியாவில் சிறப்புற்ற நிலையில் அந்நாளில் இருக்கவில்லை. அவர்களுடைய ஊதியம் போதுமான அளவில் இருந்தும் அவர்கள் ஆக்கவேலையில் ஈடுபடவில்லை. மாணவர்களுக்கு நன்றாகப் போதிப்பதில் சிறந்தவர்களாக விளங்கினார்கள். ஆனால் புதிதாக நூல்கள் எழுதவோ ஆராய்ச்சிகள் செய்யவோ அவர்கள் மனம் செல்லவில்லை. அரங்கநாத முதலியார், சுந்தரம்பிள்ளை என்ற ஒன்றிரண்டு பேர்கள்தவிர பெரும்பான்மையானபேர்கள் புகழ் பெற்றுவிளங்கவில்லை. யாழ்ப்பாணத்திலோ என்றால், கணக்கு, கலை இயல்கள், விஞ்ஞானம் முதலிய பாடங்களில் வல்லவர்களும், வழக்கறிஞர்களும் தமிழ்மொழி

நமது நவரத்தினம் ஆவார்கள். தம்தொழில் வேறாக இருந்தும் அருங்கலைகளில் சிறப்புற்றசெய்தி வியக்கத் தக்கதல்லவா?

அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் வணிகத்துறை ஆசிரியராக இருந்து தம் ஓய்வு நேரங்களில் பல்வகையான அறிவுத்துறைக் கட்டுரைகளை எழுதிவந்தார். பிறகு சிற்ப ஓவியக் கலைகளில் சிறந்து விளங்கி ஆராய்ச்சிகள் செய்து நூல்களை எழுதினார் அவைகளில் சிறந்தது 'தென்னாட்டுச் சிற்பங்கள்' மிக என்னும் நூல். அதில் அழகிய ஓவியப்படங்களைப் பதிப்பித்து அவைகளை விளக்கும் கட்டுரைகளை வெகு சிறப்பாக எழுதி வெளியிட்டார். அந்நூல் தமிழில் வெளிவந்த சிற்ப நூல்களில் மிகச் சிறந்தது. தக்கமேற்கோள்களை எடுத்துக்கொண்டு அவற்றிற்கு மூலாதாரங்களை குறித்திட்டு அழகிய பளபளப்புக் காகிதத்தில் வெளியிட்டார். தமிழிலே இத்துணைச் சிறப்பான நூல்களைக் காண்பதரிது. அது ஆங்கில வெளியீடுபோல் உள்ளது. மேலும் இலக்கண ஆராய்ச்சியாளர் கணேச ஐயர் ஈழநாட்டில் தோன்றிய சிறந்த கல்வியாளர். அவர்கள் இயற்றிய நூல்கள் மிகப்பெருமை வாய்ந்தவை. அவரது வாழ்க்கை புனித வாழ்க்கை, மிக எளியமுறையில், உன்னத நிலையில் வாழ்ந்தவர். அவரது நினைவு மலரை ஒப்பற்ற முறையில் ஆக்கி அளித்தவர் நமது நவரத்தினம். வாழ்க்கைக் குறிப்புக்கள், அரியமொழிக் கட்டுரைகள் உயர்ந்த சமய பாடங்கள் முதலிய பற்பல சிறந்த பகுதிகளையும் அவரது வாழ்க்கைப் படங்களையும் ஒன்று [illegible]ர்த்து பெரும் நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

மேலும் யாழ்ப்பாண வட்டத்தில் சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள் [illegible] சிறந்த [illegible] சமயத்துறைமட்டுமேயன்றி கல்வித்துறையிலும் ஏழக் [illegible]

யிடப்பட்டது. அப்பாராட்டு மலரில் அரிய கட்டுரைகள் பல வந்துள்ளன. அவற்றில் ஒன்று 'மூர்த்தி தலம் தீர்த்தம்' என்ற பொருள்பற்றி திரு. நவரத்தினம் எழுதிய கட்டுரையாகும். பல படங்களுடன் ஒரு சிறந்த பதிப்பாக அந்நூல் வெளிவந்துள்ளது. இன்னும் நவரத்தினம் அவர்கள் ஈடுபட்டிருந்த நினைவுமலர்கள், அவைகளில் காணும் கட்டுரைகள். தனிக் கட்டுரைகள் முதலியவைகளை எடுத்து எழுதினால் ஏட்டில் அடங்கா. திருக்கோயில்களின் பரிபாலன முறையில் அரசியலார் எடுத்துக்கொள்ளும் மேற்பார்வைகளின் தொடர்பாக ஈழநாட்டில் கிளர்ச்சி ஏற்பட்டபோது அந்தச் செய்திகளைக்குறித்து அரிய சிறு நூல்களும் கட்டுரைகளும் எழுதி அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தார்கள். அவைகளில் ஆராய்ச்சி செய்யப் பல நிலையங்களில் வெளியிட்ட நூல்களையும் கட்டுரைகளையும் தேடிஎடுத்துத் தக்கமேற்கோள்களோடு அவைகளைப் பதிப்பித்தார்கள். எந்தச் செயலை எடுத்துக் கொண்டபோதும் மெய்வருத்தம் கருதாது வெகு ஊக்கத்தோடு முயற்சிகள் செய்து கருமமே கண்ணாயினராக இருந்து பாடுபடும் பான்மை உடையவர்.

### 'ஒத்தபண்புடையார் மெத்தவளமுடையார்'

'தமிழ் இலக்கியங்களில் ஒத்த பண்புடைமையே இலட்சிய வாழ்க்கையாக' தலைசான்ற புலவர் பெருமக்கள் கருதி வரைந்தார்கள். பண்டைய தமிழ்ச்சங்கஇலக்கியம் முழுதும் இல்வாழ்க்கையில் ஒத்த பண்புடைமையே போற்றப்பட்டது.

அப்படிப்பட்ட [illegible]ழுங்கு முறை இல்லறவாழ்க்கைக்கு திரு. நவரத்தினம் தம்பதிகள் எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். ஒத்த பண்புடைய மணவாழ்க்கைக்கு இந்தக்குடும்பமே [illegible]காரணமாக விளங்கிற்று.

சிற்பக்கலை, ஓவியக்கலை, இலக்கியக்கலை இவைகளில் சிறப்புற்றால் இல்லக்கிழத்தியார் இசைக்கலை, யாழ்க்கலை முதலியவைகளிலே சிறப்புற்றிருக்கிறார். கணவனார் நூல் ஆராய்ந்து சித்திரங்களோடு வெளியிட்டிருக்கின்றார். இந்த வகையில் தாங்கள் இன்புற்ற கலையின்பத்தை உலகினருக்கு ஊட்டிவைப்பதில் இருவரும் மனமொத்து சிறந்திருக்கிறார்கள் என்றால் மிகையல்ல.

கலா நிபுணர் ஆன முறை

கோ[illegible] வக்கிழார்
ம. இராமச்சந்திரனார்

யில் கலையில் ஈடுபாடு கொண்ட கணக்கற்ற பெருமக்கள் அவர்களுடைய நட்புக்கு உரியவர்கள் ஆனார்கள். அன்னார்கள் யாழ்ப்பாணம் செல்லும் நாட்கள் எல்லாம் அவர்களுக்கு வரவேற்புத் தந்துள்ளாரல்லவா? அதுபோலத் தென் தமிழ் நாட்டிலும் கலை நண்பர்களைக் கண்டு அளவளாவ அன்னார் சென்றதுண்டு. அப்போது தமிழ் நாட்டில் இருக்கும் அரும் பெரும் கலாபீடங்களான திருக்கோயில்களைக் கண்டு தொழுது ஆராய்ந்து மகிழ்ந்ததுண்டு. ஒரு முறை தம் யாழ்ப்பாண உறவினர்கள், நண்பர்கள், குடும்பத்தார் முதலியவர்களோடு தென்னாட்டுத் திருக்கோயில்களைக் காணவந்தார். அப்போது சேவை வந்து கொங்கு நாட்டுக் கோயில்களைக் கண்டு தொழுதார்கள். அடியேன் இல்லத்தில் சில நாட்கள் தங்கியிருந்து திருப்பேரூர் மருதமலை முதலிய புனித இடங்களைக் கண்டும் அ[illegible]கிருக்கும் அற்புதச் சிற்பங்களைக் கண்டுகளித்தும், பஞ்சாலை முதலிய தொழிற்சாலைகளைக் கண்டு மகிழ்ந்தும் வேறூர்களுக்குச் சென்றார். அந்தப் பயணம் எல்லாருக்கும் மகிழ்ச்சி தந்

சடங்கு முடிவு பெற்றிருக்குமென்பதாலும், அங்கு செல்லவும் தற்போதைய அரசியல் நிபந்தனைகளில் முடியாத செயலாகுமென்பதாலும் மறுநாள் காலையில் மறுதந்தி ஒன்று விடுத்தேன். எங்கள் ஆழ்ந்த துயரத்தை அதில் குறித்தேன், என்ன செய்வது இறைவன் செயல்! திடீரென்று என் நண்பர்களுக்கும் செய்தியைத் தெரிவித்தேன். அவர்களும் துயரப்பட்டார்கள். மணிப்போர்க் கலைஞர் மறைந்தார் என்றால் அவரைப்போல் இனிக் கலைச்சேவை செய்பவர் எவர் உள்ளார் எனத் துக்கப்பட்டோம். அம்மையாருடைய துக்கத்தை அளவிடத்தக்கவர் யாருள்ளார். அதனை ஆறுதல் கூறித் தடுப்பவர் யாருள்ளார் என்று அந்நாள் முழுதும் ஏங்கியிருந்தோம். மறைந்தவரை இறைவன் தன் திருவடிக்கு அழைத்துக்கொண்டார் என்று சொல்லி அவரது ஆன்மா சாந்தி பெறுவதாக என்று இறைவனை வழுத்துகிறோம்.

அன்பர் மறைந்தார் இனி அவரைக் காண இயலாது. அவருடைய புகழுடல்மட்டும் நம் நெஞ்சில் குடிகொண்டிருக்கும். அவர் இயற்றியுள்ள புகழ்பெற்ற நூல்கள் அவரது புனித வாழ்க்கையை அறிவுறுத்தும். கலைப்புலவர் நவரத்தினம் புகழ் வாழ்க. அவரது ஆன்மா சாந்தி உறுக. அவரது அரிய கலை வளர்க. தமிழ்மொழி வளர்க. அது சிறந்து பொலிக!

## இரண்டு வருடம் ஆனால்..

சுழிபுரம், சனி

வழக்கம்பரை அம்மன் கோவிலடியிலிருந்து பண்டத்தரிப்புக்கு செல்லும் பாதையின் ஓர் பகுதி சுழிபுரம் :கிராம சபையினரால் தார் ஊற்றிய தெருவாக அமைக்கப்பட்டு வருடங்கள் பலவாகிவிட்டன, ஆனால் இதுவரை முற்றாகத் திருத்தப்படவேயில்லை. சுழிபுரம் கிராமசபையினரால் தார் ஊற்றப்பட்டபகுதியிலுள்ள பாதையின் பழுதைத் திருத்துவதற்காக ஒப்பந்தம்செய்யப்பட்டது. ஆனால் அப்பாதையின் திருத்தத்துக்காக பயன்படுத்தப்படும் மூலப் பொருள்கள் அதாவது கல்மணல் போன்றவை இதுவரை தெருவின் பக்

## ஐயாறன் எழுதுகிறார்

யாழ்ப்பாணத்திலே ஒரு டாக்ஸியிலே சுமார் ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சாமானை ஓர் அன்பர் மறதியாகவிட்டுவிட்டு இறங்கிவிட்டாராம். சிலமணிநேரம் கழித்து இது தெரிந்ததும், திடுக்கிட்டு, விசாரித்ததில், 24 வயதுள்ள முத்துராசா என்ற அந்த டாக்ஸி டிரைவர், சாமான் பத்திரமாக இருப்பதாயும் நேரில் கொண்டுவந்து தருவதாகவும் சொல்லி, இரவிலே தானே நேரில் அச்சாமான்களை வீடுதேடிக் கொண்டுபோய்க் கொடுத்ததாக அந்த அன்பர் நன்றியுடன் தெரிவித்தார்: இவ்வளவு நேர்மையாக நடந்த அந்த வாலிபரைப் பாராட்டுவதுடன், அவர் இங்குள்ள டாக்ஸி டிரைவர்களின் புகழையே ஓங்கச் செய்திருக்கிறார். அவர் வாழ்க!

0 0 0

சென்றமாதம் தமிழகத்திலிருக்கையில் சுமார் 10 வயதுள்ள ஓர் ஏழைப் பிராமணப்பெண் வந்து ''மாமா, நோட்டுப்புத்தகம் வாங்க வேண்டும், அரை ரூபாய் இருந்தால் கொடுங்கள்'' என்று கேட்டது. கையில் இருந்த ஒரு ரூபாயைக் கொடுத்தேன்.

பிறகு கால்மணிக்கெல்லாம் வேறு வேலையாக வெளியே செல்லுகையில் எதிரிலே அந்தப் பெண்ணைப்பார்த்தேன். இடது கையில் ஏதோ பொட்டணமிருந்தது. என்னைக் கண்டதும் அந்த கையைப் பின்புறமாக மறைத்துக் கொண்டு, மாமா இந்தாருங்கள் பாக்கிகாசு'' என்று சொல்லி அரை ரூபாவைத் திருப்பிக் கொடுத்ததும் என் மனம் ஏதோ வேலை செய்தது. பெண்ணிடம் நோட்டுப் புத்தகமில்லை. அதற்கு பதில் ஏதோ பொட்டணம். என்னைக் கண்டதும் அதைப் பின்புறமாக மறைத்ததன் நோக்கமென்ன?

தன் தாய்க்கு ஏதோ கடையிலிருந்து சாப்பிடவாங்கி வந்ததென்பதையும், உணவு வாங்க காசுவேண்டுமென்று கேட்கக் கூச்சப்பட்டே, இவ்விதம் ஒரு 'பொய்' சொல்லியதாயும், அதனாலேயே பொட்டலத்தை மறைத்ததாகவும் சுலபமாக ஊகிக்க முடிந்தது. அந்தக் காசு கிடைத்திராவிட்டால், அந்த ஏழைக் குடும்பம் பட்டினி கிடந்திருக்கவேண்டியதுதான்! வெளியில் சொல்ல

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாட்டில் ஸ்திரமான ஆட்சியை நிலைநாட்டியதுடன் நாட்டையும் பல துறைகளிலும் முன்னேற்றியுள்ளார். அமெரிக்காவின் நட்பை மட்டும் நம்பியிருந்த பாகிஸ்தான் இன்று நவசீனு, சோவியத் ரஷ்யா ஆகிய கம் ... அயல் நாடான இந்தியாவுடன் சமாதானமாக வாழ்வதில்தான் பாகிஸ்தானின் முன்னேற்றமும் இந்திய உபகண்டத்தின் அபிவிருத்தியும் ஆசியாவின் அமைதியும் பெரிதும் தங்கியிருக்கிறது.

## சிறந்த அஞ்சலி

அமரர் அண்ணுவின் மறைவுக்குத் துக்கத் தீர்மானம் நிறைவேற்றும் யோசனையை இலங்கை ஆட்சிமன்றத்தார் கைவிட்டதன் மூலம், தமிழக மக்களின் அபிமானத்தைப் பெறக்கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தை இலங்கை இழந்துவிட்டது.

இலங்கையில் தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும், கட்சி முதலிய வேற்றுமையின்றி அமரர் அண்ணுவின் மறைவுக்குத் துக்கம் தெரிவித்து அஞ்சலி செலுத்திவருகின்றனர். தமிழ்அரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் கட்டுமன்றி, இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த தமிழ்த் தலைவர்களும் இங்கு நடைபெறும் அனுதாபக் கூட்டங்களில் கலந்துகொண்டு பேசிவருவதைப் பார்க்கையில் அண்ணு அவர்கள் தமிழகத்தில் மட்டுமன்றி இலங்கையிலும் எவ்வளவு மதிப்பைப் பெற்றிருந்தார் என்பது விளங்கும்.

இந்தத் தீர்மானத்தை அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த தமிழரல்லாத அமைச்சர்களே பிரேரித்ததும், அரசாங்கக்கட்சி அனைத்தும் ஆதரித்ததும் பெரிதும் வரவேற்கத் தக்கது. எதிர்க்கட்சிகளிலே சிலர் இதை ஆட்சேபித்துள்ளதால் சபாநாயகர் இத் தீர்மானத்தைக் கைவிட்டதுசரியே. இவ்விது தீர்மானங்களை எதிர்ப்பின்றி ஏகோபித்து நிறைவேற்றுவதுதான் மரியாதையும் பண்புமாகும்.

தி. மு. க. வைப்பற்றி இலங்கையில் பல தப்பபிப்பிராயங்களை சிலர் வளர்ப்பதுடன், இதை நம்பியே தேர்தல்பிரசாரத்தை நடத்த எண்ணியிருப்பதும்தெரிந்ததே. அவர்கள் இத் தீர்மானத்தை எதிர்த்ததும் எதிர்பார்கப்பட்டது இலங்கையில் மட்டுமல்ல தமிழகத்திலும் கூட இக் கட்சியைப் [ப]ற்றி அதிக தப்பெண்ணமிருந்தது. அமரர் அண்ணு தமது உயர்ந்த பண்பாலும், நேர்மையாலும், இந்தியாவிலே தி. மு. க. கட்சியின் மதிப்பையும் புகழையும் பெரிதும் உயர்த்திஞர். பல வெளிநாடுகளின் மதிப்பையும் பெற்றுர். ஆனுல் இலங்கைப் யில் சில அரசியல் வட்டாரங்களில் இக் கட்சியைப் பற்றிய சில தப்பெண்ணங்கள் இருக்கின்றன. நமது இலங்கை பிரதமர் உள்ளிட்டு தமிழக பல கட்சித் தலைவர்களும் முதல்வருடனும் அந்த அரசுடனும் நேர்முகமாகத் தொடர்புகொண்டு பேசினுல் தப்பெண்ணங்களெல்லாம் மறையவும், தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் புதிய ஒத்துழைப்பு ஏற்படவும் வழிபிறக்கும். அதுவே அமரர் அண்ணுவுக்கு இலங்கை செலுத்தும் சிறந்த அஞ்சலியுமாகும்.

## மீன்பிடி படகு

காங்கேசன்துறை, சனி

மயிலிட்டி சென். மேரிஸ் கூட்டுறவுச்சங்கத்திற்கு கடனுதவி மூலம் கடற்ருெழில் இலாகாவினுல் கொடுக்கப்பட்ட இரு இயந்திரப் படகுகளும் நேற்றைய தினம் முதல் தடவையாக மீன் பிடிக்கச் சென்றன. மேலும் ஒரு இயந்திரப் படகை அரசாங்கம் இச்சங்கத்திற்கு தந்துதவுவதற்கு முன்வந்துள்ளதாக இச்சங்கத்தின் தலைவர் திரு. லோறென்ஸ் தெரிவித்துள்ளார்.

## இன்று நேர்முகப் பரீட்சை

அளவெட்டி, சனி

தெல்லிப்பளை கிராமசபைக்கு சோலைவரி அறவிடுவதற்கான ஊழியர் தெரிவு நேர்முகப் பரீட்சை இன்று கிராமசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 2"-ம்திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.

பேர்கள்தவிர பெரும்பான்மையானபேர்கள் புகழ்பெற்றுவிளங்கவில்லை. யாழ்ப்பாணத்திலோ என்ருல், கணக்கு, கலை இயல்கள், விஞ்ஞானம் முதலிய பாடங்களில் வல்லவர்களும், வழக்கறிஞர்களும் தமிழ்மொழி வளர்ச்சியிலும் அருங்கலைகளிலும் சிறந்து விளங்கி ஆராய்ச்சியுரைகளை வெளியிட்டனர். இப்படிப்பட்ட ஆராய்ச்சியாளர் பரம்பரையில் தோன்றியவர் ...ர்த்து பெரும் நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

மேலும் யாழ்ப்பாண வட்டத்தில் சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள் மற்ருெரு சிறந்த சமயத்துறையாளர். சமயத்துறைமட்டுமேயன்றி கல்வித்துறையிலும் எழுத்தாளர் துறையிலும் சிறந்து விளங்கியவர்- அக்குருக்களின் சிறப்பை விளக்கி ஒரு பாராட்டு விழாமலர் அண்மையிலே திரு. ச. அம்பிகைபாகன் அவர்களால் வெளி...

அப்படிப்பட்ட [ஒ]ழுங்கு முறை இல்லறவாழ்க்கைக்கு திரு. நவரத்தினம் தம்பதிகள் எடுத்துக்காட்டாக விளங்கினுர்கள். ஒத்த பண்புடைய மணவாழ்க்கைக்கு இந்தக்குடும்பமே [கா]ரணமாக விளங்கிற்று.

ஒழுங்குமுறை சைவஒழுக்கம், சமய வாழ்க்கை, இவைகளில் மட்டுமேயின்றி கலை வளர்ச்சியிலும் இருவரும் ஒத்த பண்புடையார் எனின் வியப்பாகாது. கொழுநனுர் ...

அ[வ]ிருக்கும் அற்புதச் சிற்பங்களைக் கண்டுகளித்தும், பஞ்சாலை முதலிய தொழிற்சாலைகளைக் கண்டு மகிழ்ந்தும் வேறூர்களுக்குச் சென்ருர். அந்தப் பயணம் எல்லாருக்கும் மகிழ்ச்சி தந்தது. தம் ஊருக்குத் திரும்பினதும் நன்றி செலுத்தும்வகையில் ஒரு கடிதம் நவரத்தினம் தம்பதியார்கள் எழுதினுர்கள். ''தங்கள் குடும்பத்தாரின் வரவேற்பும் விருந்தோம்பலும் எங்களை என்றும் மறவாத நிலையில் வைத்துவிட்டன. பண்பாட்டில் தங்கள் மருமகளார் கொங்கு நாட்டுப் பெண் என்று கருதமாட்டோம். யாழ்ப்பாணப்பெண்மணி என்றே மதித்துப் பாராட்டுகிறேம்'' என்று வரைந்தார்கள். இந்தச் சொற்கள் எங்கள் குடும்பத்திற்குப் பெருமகிழ்ச்சி தருகின்றன. அத்தனை அன்பு மேலிட்டவர்கள் அத்தம்பதியார்கள். மேலும் பல பொதுப் பணிகளுக்காகக் கலைப்புலவர் வட நாட்டுத் தலைநகர் முதலிய இடங்களையும் பார்த்து மகிழ்ந்திருக்கிருர்கள்.

**கலைப்புலவர் எங்குற்றுர்!**

மாசித் திங்கள் பன்னிரண்டாம் தேதியன்று (23-2-62) வேறு வேலையாக என் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். பிறகு வீடு திரும்புவதற்கு இரவு எட்டு மணியாயிற்று. வீடு வந்ததும் என் மனைவி ஒரு தந்தி வந்திருக்கிறது என்று சொல்லி அதனைக் கொடுத்தாள். தந்தி என்ருல் எவருடைய நெஞ்சும் துடிக்குமன்ருே! விரைவாக அதனைக் கிழித்துத் திறந்தேன். மகேசுவரியம்மை என்று கையெழுத்திட்டிருந்தது. திடுக்கிட்டுப் படித்தேன். அந்தோ, நெஞ்சு பதைத்தது. கண்களில் துளிகள்வந்தன: கலைப்புலவர் நவரத்தினம் காலகதியடைந்தார் என்றும் அன்று மாலை இறுதிச் சடங்கு நடைபெறும் என்றும் கண்டிருந்தது. என் மனைவியிடம் செய்தியறிவித்தேன். அவளும் துயரத்தில் ஆழ்ந்தாள். யாழ்ப்பாணம் சென்று ஆறுதல் தெரிவிப்பது கடமை. என்ருலும் அமரச்

# பெர்லின் நெருக்கடி

அடுத்த மாதம் 5-ம் திகதி மேற்கு ஜெர்மன் அதிபர் தேர்தல் மேற்கு பெர்லினில் நடைபெறவிருக்கின்றது. இதனை கிழக்கு ஜெர்மனியும் ரஷ்யாவும் கடுமையாக ஆட்சேபித்துள்ளன. ஆனுல் இந்த ஆட்சேபங்களைப் பொருட்படுத்தாமல் மேற்கு ஜெர்மனி முன்பு திட்டமிட்டபடியே தேர்தலை மேற்கு ஜெர்மனியில் நடத்துவதற்கு முடிவுசெய்திருக்கிறது.

இந்த நிலைமையில் மேற்கு ஜெர்மனிக்கு அருகாமையில் ரஷ்யப் படைகளும் கிழக்கு ஜெர்மன் படைகளும் ராணுவ ஒத்திகைகள் நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளன.

மேற்கு பெர்லினில் அதிபர் தேர்தல் நடைபெறுவதற்கு ஆட்சேபம் தெரிவிப்பதாக இந்த ஒத்திகையைக் கருதமுடியாது. இது மேற்கு நாடுகளுக்கு ஒரு பயமுறுத்தல் என்றே கொள்ளவேண்டும். மேற்கு பெர்லினில் அதிபர் தேர்தல் நடைபெற்ருல் அதன் காரணமாக எழும் விளைவுகளுக்கு அந்த நாடுதான் பொறுப்பேற்க வேண்டும் என்று கிழக்கு ஜெர்மனியும் சோவியத்யூனியனும் முன்னர் விடுத்த எச்சரிக்கை உதாசீனம் செய்யப்பட்டு விட்டதால், ஏதாவது பதில் நடவடிக்கை எடுத்து தமது மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியநிலை கிழக்கு ஜெர்மனிக்கும், ரஷ்யாவுக்கும் ஏற்பட்டிருக்கலாம். இந்த ராணுவ ஒத்திகை இந்த அடிப்படையிலேயே நடைபெறுவதாகவும் எண்ணுவதற்கு இடமில்லை.

1948-ம் ஆண்டில் மேற்கத்திய நேச நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் பிணக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து பிளவுபட்ட பெர்லின் நகர் அரசியல் புகைக்கும் எரிமலையாகவே இருந்துவந்திருக்கிறது. இருதரப்பு படைகளும் இங்கு எந்த நிமிடத்திலும் மோதிக்கொள்ளக்கூடிய நிலையிலேயே இருந்து வருகின்றன. மேற்கு ஜெர்மனியுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கு பெர்லின் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் அதிகாரத்திலுள்ள ஒரு பகுதிதான். கிழக்குப் பெர்லின் ரஷ்யாவின் ஆதிக்கத்திலுள்ள பகுதி. இரண்டாவது உலகயுத்தத்தின் போது இந்தநகரைவெற்றி கொண்ட இந்த நான்கு நாடுகளும் அதனைப் பங்கு போட்டுக் கொண்டன.

மேற்கு பெர்லினுக்கு செல்வதற்கு கிழக்கு ஜெர்மனியினூடாக தரை, கடல், ஆகாய மார்க்கங்கள்உண்டு. மேற்கு நாடுகளுடன் ரஷ்யாவுக்கு தகராறுகள் வலுக்கும்போது அல்லது கிழக்கு ஜெர்மனிக்கு கோபம் மீறும் போதும் இந்தத் தரைவழிகளை மூடிவிட்டு கெடுபிடி செய்வது வழக்கமாகி வந்திருக்கிறது. 1968ல் தரை மார்க்கத்தையும், கடல் மார்க்கத்தையும் கிழக்கு ஜெர்மனி மூடிவிட்டதால் ஆகாயமார்க்கத்தை மட்டுமே மேற்கு ஜெர்மனி மேற்கு பெர்லினுடனை போக்குவரத்துக்குப் பாவிக்கவேண்டியிருந்தது.

1954ல் இருந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கு ஜெர்மனி தனது அதிபர் தேர்தலை மேற்கு பெர்லினில் நடத்தவிருக்கின்றது. அப்பொழுதிருந்தே ஒவ்வொரு தடவையும் சோவியத் யூனியன் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்திருக்கிறது. ஆனுல் அதிபர் தெரிவு நடைபெறுவதற்கு பெரிதாக இடைஞ்சல் எதுவும் செய்ததில்லை. இந்தமுறை நடைபெறும் தேர்தலில் தீவிர வலதுசாரி தேசிய ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளவிருப்பது சோவியத் கிழக்கு ஜெர்மன் தலைவர்களுக்கு எரிச்சலை மூட்டியிருப்பதாகத் தெரிகின்றது.

கிழக்கு ஜெர்மனி விமான மார்க்கத்தையாவது தடை செய்யாமலிருக்குமானுல் தற்பொழுது எழுந்துள்ள நெருக்கடி அப்படியே ஆறிப்போகக்கூடும். ஆனுல் ஏற்கனவே சோவியத் யூனியனும் கிழக்கு ஜெர்மனியும் விடுத்துள்ள எச்சரிக்கைகளைப் பார்க்கையில் அச்சம் தருவதாகவே இருக்கின்றது.

அடுத்த மாதம் 5-ந் திகதி மேற்கு பெர்லினில் அதிபர் தேர்தல் அதே சமயம் கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்ட் ராணுவ ஒத்திகை. விளைவுகள் என்னவாகவிடுக்கும்?

— பேனு


## தேவை

'ஈழநாடு' விற்பனை செய்வதற்கு உற்சாகமுள்ள இளைஞர்கள் தேவை. தகுதி வாய்ந்த பிரயாசையுள்ள இளைஞர்களுக்கு நல்ல வாய்ப்பு. மாதச் சம்பளம் வழங்கப்படும். பைசிக்கிள் வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

**விநியோக மனேஜர், ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.**

1193



## தேவை

அலுமினியம் தொழிற்சாலையில் வேலைபார்த்து அனுபவமுள்ள ஸ்பின்னர்களும் பொலிசர்களும் தேவை முழுவிபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். யாழ் உலோகத் தொழிற்சாலை, 250-254, K. K. S. ருேட், யாழ்ப்பாண[ம்].

696


பாதையின் பழுதைத் திருத்துவதற்காக ஒப்பந்தம்செய்யப்பட்டது. ஆனுல் அப்பாதையின் திருத்தத்துக்காக பயன்படுத்தப்படும் மூலப் பொருள்கள் அதாவது கல்மணல் போன்றவை இதுவரை தெருவின் பக்கத்தே கொண்டுவரப்படவில்லை. இதனுல் இப்பாதையால் செல்பவர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகிருர்கள்.

## பூநகரி மக்கள் குறை

யாழ்ப்பாணம், ஞாயிறு

பூநகரி - கேரதீவு, சங்குப்பிட்டித்துறைகளில் குடிநீர் வைப்பதற்கு அரசாங்கத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தும், இதற்கெனஇருக்கும் தாங்கியில் ஒழுங்காக தண்ணீர் வைக்கப்படாதிருப்பதால் இப்பகுதி பிரயாணிகள் தாகத்திற்கு தண்ணீர் பெறுவதில் கஷ்டத்துக்குள்ளாகின்றனராம்.

தண்ணீர் வைக்கப்படும் தண்ணீர் தாங்கி மக்கள் பார்வைக்குத் தெரியும்படி இருக்கச் செய்வதற்கும், ஒவ்வொரு நாளும் இதில் குடிநீர் நிரப்பி வைப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கும்படியும் பூநகரி மக்கள் அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸையும் கிளிநொச்சி எம். பி.பண்டிதர் கா.பொ. இரத்தினத்தையும் மகஜர் மூலம் கேட்டுள்ளனர். (ந. நி)

## பாராட்டு விழா

சித்தங்கேணி, ஞாயிறு

வட்டுக்கோட்டை கிராமசபை முதல்வராக திரு. க. ச. நிற்சிகம் தெரிவுசெய்யப்பட்டதைப் பாராட்டுமுகமாக வட்டுக்கோட்டை மேற்கு வாசிகசாலை முன்றலில், வரவேற்புபசார விழாவொன்று இன்று மாலை நடைபெறவிருக்கிறது.

10ம் வட்டார அங்கத்தவர் திரு. வ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட மற்றும் பலர் பாராட்டுரை வழங்குவர்.

## இடமாற்றம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. மா. லிங்கப்பிள்ளை திருக்கோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். காலியான இவரது இடத்திற்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

பொட்டளக்கையை மறைத்ததாகவும் சுலபமாக ஊகிக்க முடிந்தது. அந்தக் காசு கிடைத்திராவிட்டால், அந்த ஏழைக் குடும்பம் பட்டினி கிடந்திருக்கவேண்டியதுதான்! வெளியில் சொல்ல முடியாமல் இங்கும்கூட எவ்வளவு எளிய குடும்பங்கள் சங்கடப்படுகின்றனவோ!

பத்தர் கட்கருளும் வைத்தார் பாய்விடை
ஏறவைத்தார்
சித்தத்தை ஒன்ற வைத்தார் சிவமதே நினைய
வைத்தார்
முத்தியை முற்ற வைத்தார் முறை முறை
நெறிகள் வைத்தார்
அத்தியின் உரிவை வைத்தார் ஐயன்
ஐயாறனுரே.

—அப்பர் அடிகள்

## யாழ். ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யான தமிழ்ச் சொல்லை தெரிவதில் மட்டும் சபை சுமார் அரைமணி நேரத்துக்கு மேலாக விவாதித்து இறுதியில் 'பரிசீலனை' என்ற சொல்லை இதற்காகத் தெரிந்தது.

கூட்டம் ஆரம்பமானதிலிருந்து முடிவடையும்வரை திருவாளர்கள் அல்பிரட் துரையப்பா, அ. விசுவநாதன் ஆகியோருக்கும், முதல்வர் திரு. எஸ். நாகராஜாவுக்குமிடையில் பலதடவைகள் கருத்துவேற்றுமை காணப்பட்டதோடு அவைகள் சொல் அம்புகளாகவும் பரிமாறப்பட்டன.

சபையில் கைதட்டும் உரிமையையும் அங்கத்தவர்களிடமிருந்து பறிக்கவேண்டாமென திரு. அல்பிரட் துரையப்பா முதல்வரிடம் சொன்னபோது, தனக்குள்ள அதிகாரங்களையும் துண்டுப்பிரசுரங்கள் மூலமும், மற்றெந்த வழிமூலமும் பறிக்கமுடியாதென முதல்வர் பதிலளித்தது இங்கு முக்கியமானதாகும்.

**28 பிரேரணைகள**

சுமார் 5மணி நேரம் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட 49 பிரேரணைகளில் 28மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டன. மிகுதி 21 பிரேரணைகளும் அடுத்த மாதாந்தக்கூட்டத்தில் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. (கா. நி.)

## பாதிப்பு

திருக்கோணமலை துறைமுகத்தில் நடைபெறும் வேலைநிறுத்தத்தால் கனடாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை பாதிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org